The Good Pastor

நல்ல ஆயன்

9 - APR 1920

"நாம் நல்ல ஆயன்...நமது ஆட்டுக்கிடையைச் சேராத வேறுடுகளும் நமக்குண்டு. அவைகளையுஞ் சேர்த்தணைக்க...ஒரே மேய்ப்பனின்கீழ் ஒரே ஆட்டுக்கிடை உண்டாகும்." (அரு. 10: 11-16.)

புத்தகம் 18. } எப்பிரல் 1920. { இலக்கம் 4.

NO ONE THINKS OF THIS.
இதைப்பற்றிச் சிந்திப்பார் யாருமில்லை.

மிக்கேல் ஆஞ்சலோ பூனரோதி எனும் பெயரினர் சித்திர வித்தையிற் சிறந்து விளங்கினவர். இவர் நமதாண்டவர் சிலுவையிலறையுண்டு மரணமடைந்த படமொன்றை யெழுதியுள்ளார். அப்படம் இவரால் எவ்வளவு திறமையுடனும் சாதுரியத்துடனும் எழுதப்பட்டிருந்ததெனில், அதைக் காண்போர் கண்கள் கலங்காதிரா. கண்ணராவியான அக்காட்சியை அவர்கள் காணக் காண கதறியழாதிரார். அப்படத்தில் நமதாண்டவருடைய கண்களிரண்டும் கொவ்வைப்பழங்களுக்கொப்பாய் சிவந்திருந்தன; உதடுகளிரண்டும் கன்றிக் கறுத்து இரத்தக்கறையாயிருந்தன; முகம் வாடி வதங்கி வெளுத்து வியசனமுற்றிருந்தது. வயிறு உள்ளுக்கு ஒடுங்கி விலா எலும்புகளெல்லாம் புடைப்புற்று, மார்பு முன்னுக்குவந்திருந்தது; சர்வாங்கமும் நைந்தும் பிய்ந்தும் இரத்தமயமாயிருந்தது. யாருக்கும் பரிதாபத்தைப் பிறப்பிக்கக்கூடிய இம்மேரையாய் அப்படம் வரையப்பட்டிருந்தது. அப்படத்தின் அடியில் வரையப்பட்டிருந்த வார்த்தைகளோ இன்னுமதிக அநுதாபத்தை நமதாண்டவர்மட்டில் உண்டாக்கக்கூடியவைகளாயிருந்தன. "இதைப்பற்றிச் சிந்திப்பார் யாருமில்லை" என்பனவாம் அவ்வார்த்தைகள்.

ஆம், இதைப்பற்றிச் சிந்திப்பார் யாருமில்லையென சுருங்கச் சொல்லப்பட்ட அவ்வார்த்தைகளைச் சிறிது ஆழ்ந்து யோசிப்பார் யாவரும் வியப்பும் பிரமிப்புங் கொள்ளாமற்போகார். வியப்புந் திகிலுங் கொண்டு, தங்களுடைய நன்றிகெட்டதனத்துக்காக அழுத கண்ணும் சிந்திய மூக்குமாயிருப்பார்கள். இதோ! ஓர் மனிதன் சாவின் எத்தனமாகிய தூக்குமரத்தில் தூக்குண்டு தொங்குகிறான். அவனை நீ பார்க்கிறாய்; ஆனால் அவனையோ நீ அறியாய். இந் நிர்ப்பாக்கியன் தான் செய்த ஓர் அடாத காரியத்துக்காக இத்தகைய தண்டனைக்குள்ளானானென்று உன் உள்ளத்தில் நீ நினைத்துக்கொள்வாய். ஆயினும், அம்மனிதனுக்கு நேர்ந்த அவலமான சாவைப்பற்றி உன்னை அறியாமலே உனக்குள் அநுதாபமும், பரிதாபமும் உண்டாகும். ஆம், இது உனக்குள்ள இயல்பு. ஆனால் அவனோ ஓர் நிரபராதி

யென்றும், மாசற்றவனென்றும், யாருக்கும் இயாதோர் தீங்கும் செய்தவனல்லவென்றும் உனக்குத் தெரியவருமானால், நீ ஆச்சரியப்படாயோ? குற்றமற்றவன் ஏன் தூக்குண்டு சாகவேண்டுமென்று பிரமிப்புகொள்வாய். மேலும் அவன் ஓர் மகாபிரபுவென்றும், பேருபகாரியென்றும், எல்லோருக்கும் எல்லாமுமென்றும் — ஓரே வார்த்தையில், அவனன்றி அணுவு மசையாதென்றும் உனக்குத் தெரியவருமானால், ஆ! உன் உள்ளத்திலுண்டாகும் உணர்ச்சிகள் எப்பேர்ப்பட்டவையாகும்!! அப்படியானால், மனுக்குலத்தின்மட்டில்வைத்த நேசமிகுதியால் மனிதனாய் அவதரித்த கடவுள் ஒரு பெரும் பாதகனைப்போல் பார இருப்பாணிகளால் கழுமரத்தில் அறையுண்டு, கண்ணராவிக்குரிய கோலமாய் உயிர்துறந்திருப்பது யாரைத்தான் பிரமிக்கச்செய்யாது!! "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என அவருடைய பத்திராசனத்துக்குமுன் பத்திச்சுவாலகர் அச்சவணக்கத்துடன் நின்று துத்தியங்கள்பாடி அவரை தொழுது நிற்கின்றார்கள். அர்ச். இராயப்பர் வசனித்திருக்கிறபடி "அவர் யாதொரு பாவமுஞ் செய்ததுமில்லை, அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை" (1. இரா. II. 22). அவரை வாதித்து கொலைசெய்தவர்களை நோக்கி அவர் "உங்களில் எவன் என்னிடத்தில் பாவத்தைக்கண்டுபிடித்துக்காட்டுவான்?" (அருளப். VIII. 46) என திருவுளம்பற்றியிருக்கிறார். அவரைக்காட்டிக்கொடுத்த துரோகி, யூதாஸ் பிரதான ஆசிரியர்களுக்கும் மூப்பர்களுக்குமுன் கூறிய உறுதிமொழி யென்ன? "குற்றமில்லாத இரத்தத்தைக்காட்டிக்கொடுத்து பாவங்கட்டிக்கொண்டேனே!" (மத். XXVII. 4) என்று சொல்லி அவநம்பிக்கைப்பட்டு அங்கலாய்த்தான். அவருக்கு மரணத் தீர்ப்பிட்ட போஞ்சுபிலாத்து என்ன சொன்னான்? "இந்த நீதிமானுடைய இரத்தத்தின்மட்டில் நான் குற்றமற்றவனாயிருக்கிறேன், நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள்" (XXVII. 24) என்றான். இப்படி மாசற்றவரும், பரிசுத்தருமான சர்வேசுரன் கொடிய வாதனைகள்பட்டு நீச மரணத்துக்குள்ளானாரென்று சிந்திக்கிறவர்கள் எத்தனை பெயர்? சிந்தித்துப் பிரமிப்பும் இரக்கமுங் கொள்ளுவோர் எத்தனை பெயர்?

மேலும், கல்லுங் கரையுமாறு அவர் கஸ்தி, துன்பம், வாதனை, நிந்தை அவமானங்கள் பட்டனுபவிக்கையில் எவ்வளவு சாந்தமும் பொறுமையுமுள்ளவராயிருந்தார். "தூஷணிக்கப்படும்போது தூஷணியாமலும், பாடுபடும்போது மிரட்டாமலுமிருந்தார்" (1. இரா. II. 23). ஆம் துஷ்டயூதர் அவர்மட்டில் தேவதூஷணங்களைக் கக்கி, அவர் கலகக்காரனென்றும், குழப்பக்காரனென்றும், பசாசுடனும் பாவிகளுடனும் உறவாடுகிறவனென்றும், இன்னும் பலவிதமாயும் அவரைத் தூஷிக்கும்போது, ஆ! அவர் எவ்வளவோ ஆச்சரியத்துக்குரிய பொறுமையைக் காட்டினார். யூதர்களால் அவர் பிடிபட்டபோதும், கயிறு சங்கிலிகளால் கட்டப்பட்டபோதும், எல்லோராலும் கைவிடப்பட்டபோதும், பாவி சீஷனால் காட்டிக்கொடுக்கப்பட்டபோதும், தலைமை சீஷனால் மறுதலிக்கப்பட்டபோதும், நீதி ஸ்தலங்கள் தோறும் அலங்கமலங்க இழுபட்டபோதும், நியாயாதிபதிக்குமுன் குற்றஞ்சாட்டப்பட்டபோதும், கற்றாணிற் கட்டுண்டு அடிபட்டபோதும், முண்முடி தரிக்கப்பட்டுப் பரியாசு இராசாவாக நிந்திக்கப்பட்டபோதும், முகத்தில் துப்பப்பட்டபோதும், கன்னத்தில் அறையப்பட்டபோதும், சர்வாங்கங்கள் கிழிபட்டபோதும் முறைப்படாமல் எவ்வளவோ பொறுமையுடனிருந்தார்! சிலுவைமரத்தில் அறையுண்டு மரணாவஸ்தையாயிருக்கும்போதுமுதலாய் தம்மை வாதிக்கிறவர்களுக்காகவும், அவமானப்படுத்துகிறவர்களுக்காகவும் தம்முடைய பிதாவைநோக்கி: "பிதாவே! இவர்கள் செய்கிறதை அறியாமற் செய்கிறார்கள், இவர்களை மன்னித்தருளும்" என்று வேண்டிக்கொள்ளுகிறார். ஓ! மனுக்குலமே!! உனக்காக இத்தகைய சீறுமாறுகளுக்கு உள்ளான இரக்ஷகரை உன்னில எததனை பெயர் நினைவுகூர்கிறார்கள்? நினைவுகூர்ந்து அவர்பேரில் அனுதாபப்படுகிறார்கள்?

நமதாண்டவர் நம்மேல் வைத்த அன்பினால் தம்மை நிஷ்டூர வாதனைகளுக்கும், நீச மரணத்துக்கும் கட்டாயமாயலல,

ஆனால், மனப்பூர்வமாகவே ஒப்படைத்தார். "அநியாயமாய் நடுத்தீர்க்கிறவனுக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1. இரா. II. 23). "அவர்தாமே இஷ்டப்பட்டுப் பலியானார்" (இசையாஸ் LIII. 7). அர்ச். அருளப்பர் சுவிசேஷத்தில் இன்னுந் தெளிவாய்ச் சொல்லப்பட்டிருக்கிறபடி "என்னிடத்திலிருந்து என் உயிரைப் பறிக்கிறவன் ஒருவனுமில்லை; ஆனால் நானாக அதைக் கொடுக்கிறேன். அதைக் கொடுக்க எனக்குத் தத்துவமுண்டு; மீளவும் அதை யடைய எனக்குத் தத்துவமுண்டு" (X. 18) என்று நமதாண்டவரே திருவுளம்பற்றியிருப்பதினால், மனமொப்பித் தம்மை மரணத்துக்குக் கையளித்தார். ஆம், அவர் மெய்யான தேவனும் மெய்யான மனிதனுமானவர். ஆனபடியால், அவர் தம் உயிரைக் கொடுக்கவும், மறுபடியும் அதை அடையவும் சர்வ சுதந்தரமும் சர்வ வல்லமையு மவருக்குண்டு. இதை எண்பித்துக்காட்ட, இவர் தம்முடைய சத்துராதிகள் ஓர் தருணத்தில் தம்மை யோர் கிடுகிடு பாதாளத்தில் தள்ளிக் கற்களாலெறிந்து கொல்ல எத்தனித்திருக்கையில், அவர்களிடமிருந்து தப்பித்துக்கொண்டார். அவர்கள் அவரை ஜெத்சமனி தோட்டத்தில் பிடிக்க வருகையில், அவர்களை நோக்கி: "யாரைத் தேடுகிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கவர்கள் "நசரேனுவாகிய சேசுவை" என்று சொல்ல, அவர் "நானே" என்றார். அவர் அவ்வாறு சொன்னமாத்திரத்தில் அவர்களெல்லோரும் பின்வாங்கித் தரையிலே விழுந்தார்கள். அப்போது நமது கர்த்தர் அவர்கள் கையிலகப்படாமல் தப்பித்துக்கொண்டிருக்கக் கூடுமென்றாலும், தம் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத் தமக்குக் காலம் வந்துவிட்டதென்று தம்மை அவர்களிடம் ஒப்படைக்கிறார். இப்படி மனுக்குலத்தின்மட்டில் வைத்த பேரன்பினால் தம்மைப் பலியாக்கின கர்த்தரை அம்மனுக்குலம் நினைக்கின்றதோ!! அம்மனுக்குலத்தினுள் எத்தனை பெயர் இப்பேரன்பைச் சிந்தித்துத் தங்கள் நன்றியறிதலை அவருக்குக் காட்டுகின்றார்கள்?

நமது கர்த்தர் நமக்காக இவ்வளவு உதாரகுணத்துடன் நிஷ்டூர மரணத்துக்குள்ளானதின் காரணமென்ன? அவரோ சகல நன்மைச் சுரூபி, சுத்த சுயம்பு. அவரிடத்தில் மிகை குறை உண்டென்று எண்ணக்கூடாத மேன்மையுஞ் சர்வ உத்தம சம்பன்னமு முடையவர். ஆனபடியால், நம்முடைய வாழ்வும் நல்லிருப்பும் அவருக்கு எட்டுணையுந் தேவையில்லை. அப்படியானால், அவர் நமக்காக பாடுபட்டு மரிப்பானேன்? அவர் நம்மட்டில்வைத்த அணைகடந்த அன்பே, நேசமே அதற்குக் காரணம். எப்படியெனில், அர்ச். இராயப்பர் வசனித்திருக்கிறபடி "நாம் பாவங்களுக்கு மரித்தவர்களாய்ப் பரிசுத்தத்தனத்துக்குச் சீவித்திருக்கும்படி அவர்தாமே சிலுவையின்மேல் தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சுமந்தார்" (1. II. 24). ஆனபடியால், நம்முடைய பாவங்களைப் போக்கி நம்மைப் பரிசுத்தப்படுத்தவும், நம்மை பாக்கியவந்தராக்கவும், நம்மை இரட்சிக்கவும் அவருக்கிருந்த ஆவலினாலேயே தம்மை இத்தகைய பாடுகளுக்கும் மரணத்துக்குங் கையளித்தார். ஆம், பாவமோ சர்வேசுரனுக்கு எவ்வளவும் பொருந்தாது. பாவத்தைக் கட்டிக்கொள்ளுகிறவன் சர்வேசுரனைப் பழிக்கிறான்—நிந்திக்கிறான்—அவரை அவமதிக்கிறான். கடன்பட்டவன் தான்பட்ட கடனை எப்படியுத்தரிக்கக்கடமைப்பட்டிருக்கிறானோ, அப்படியே கடன்காரர்களான—பாவிகளான நாம் நம்முடைய பாவங்களுக்கு உத்தரிக்கக்கடமைப்பட்டிருக்கிறோம். அப்படி யுத்தரிக்க நம்மால் இயலுமோ? இயலாது; அதேனெனில், நாம் அனைவரும் அளவுள்ளவர்கள். சர்வேசுரனோ அளவில்லாதவர். அளவுள்ளவர்களான நாம் அளவில்லாத சர்வேசுரனுக்கு நம்முடைய பாவத்தால் வருவித்த அளவில்லாத அவமானத்தை யெப்படி பரிகரிக்கவாகும்? சுவிசேஷத்திற் சொல்லப்பட்ட ஊழியன் தன் எஜமானனுக்குப்பட்ட பத்தாயிரம் தலேந்தை உத்தரிக்க எப்படி வகையில்லாமலிருந்தானோ, அப்படியே நாமும் நம்முடைய பாவங்களுக்கு உத்தரிக்க வகையில்லாதவர்களாயிருக்கிறோம். இதை உத்தரிக்க எந்த மனிதனாலும், சம்மனசாலுமுதலாய் முடியாது. இப்பேர்ப்பட்ட விஷயத்தை நமது கர்த்தர் தம்முடைய அரிய பாடுகளினாலும் மரணத்தினாலும்—இயாதோர் கடமையுமின்றி

சுயேச்சையாய், நம்மட்டில்வைத்த அன்பினால் தூண்டப்பட்டு நிறைவேற்றினார். ஆனபடியால், "பொன்னாலும் வெள்ளியினாலுமல்ல, ஆனால்......குற்றமும் மாசுமற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறீஸ்துநாதருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களென்று அறிந்துகொள்ளுங்கள்" என்கிறார் மீண்டும் அர்ச். இராயப்பர். (1. I. 20. 22). அர்ச். சின்னப்பரும் "கிறீஸ்துநாதருடைய இஷ்டப்பிரசாதத்தின் ஐசுவரியத்துக்களவாக நாம் இவருடைய இரத்தத்தினால் பாவப் பொறுத்தலையும் இவரில் இரட்சண்யத்தையும் அடைந்துகொண்டுவருகிறோம்" (எபேசி. I. 7) என்று வசனித்திருக்கிறார். நாம் பட்ட கடனை நமக்காக இன்னொருவன் உத்தரிப்பானானால், அவன்பேரில்நமக்கெவ்வளவோ நன்றிக்கடன் சுமரும். அப்படியானால், நமதன்பார்ந்த ஆண்டவருக்கு நாம் எவ்வளவோ நன்றிக்கடன்பட்டிருக்கின்றோம். ஆ! அவர் நம்மை நித்திய சாவிலிருந்தும், நித்திய கேட்டிலிருந்துங்காப்பாற்றியிருக்கிறார். இதை நினைவுகூர்ந்து அவருக்கு என்றும் நன்றி பாராட்டுகிறவர்கள் நமக்குள் எத்தனை பெயர்?

இப்படியாக இரட்சிக்கப்பட்ட மனக்குலமானது அவருக்கு என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளதாயிருக்கவேண்டியிருக்கையில், அந்தோ! அம்மனுக்குலம் அவரை நினைக்கிறதுமில்லை, அவருக்கு நன்றி பாராட்டுகிறதுமில்லை. இந்த இவர்களுடைய நன்றிக்கேட்டை தீர்க்கதரிசி இராசாவாகிய தாவீதென்பவர் அறிந்து, தாரைதாரையாய்க் கண்ணீர் சொரிந்து "தங்களுக்கு மகத்தான காரியங்களைச் செய்து இரட்சித்த தங்கள் கடவுளை மறந்துபோனார்களே" (CV. 21) என்று புலம்பியழுதார். ஆ! இது மனுக்குலத்தின் எப்பேர்ப்பட்ட நன்றிகேடு! அவகேடு!! நமதாண்டவர் நமக்காக ஓர் சிறு துளி இரத்தமுஞ் சிந்தாமல் நம்மை இரட்சித்திருந்தாலும், அல்லது சில தருணங்களில் சிலருக்குச் சம்பவித்திருக்கிறதுபோல் நமது கர்த்தர் நமக்காக சந்தோஷப் பெருக்கினால் உயிர் துறந்திருந்தாலும், அவர் நமக்குச் செய்தருளிய அரிய உபகாரத்துக்கு நாம் எவ்வளவோ நன்றி பாராட்டவேண்டியவர்களாயிருக்கிறோம். அவர் பாடுபட்டிறந்தபோது அவர் பட்ட ஆராட்டத்தையும் துயரத்தையுங் காணச் சகியாமல் உயிரற்றவைகள்முதலாய் தங்கள் துயரத்தை வெளியிட்டனவே—சூரியன் மங்கிப்போயிற்று; சந்திரன் இரத்தமயமாயிற்று; கற்பாறைகள் பிளவுற்றுப் போயின; உலக முழுமையும் அந்தகாரம் மூடிக்கொண்டது. தங்களுக்காக பாடுபடாததங்கள் சிருஷ்டிகரின் மரணத்தைப் பற்றி உயிரும் உணர்வுமற்ற இச்சிருஷ்டிகள் இவ்வாறு அங்கலாய்த்திருக்க, புத்தியும் உணர்வுமுள்ள நாம் அவர் நமக்காக பட்டபாடுகளைப்பற்றிச் சிந்தியாமலும் துயரப்படாமலும், அவருக்கு நன்றிபாராட்டாமலுமிருப்பது எப்பேர்க்கொத்த அநீதியாகும்!! அவருடைய பாடுகளையும் மரணத்தையும் விசேஷ விதமாய் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டிய இந்த அர்ச்சியசிஷ்ட வாரத்திலாவது அவருடைய பத்தினியாகிய திருச்சபையோடு நாமும் ஏகோபித்து நம்முடைய பாவாக்கிரமங்களுக்காக அழுது துக்கப்பட்டு, என்றும் அவருக்குப் பிரமாணிக்கமுள்ளவர்களாய் நடந்துகொள்ள பிரதிக்கினை செய்துகொள்வோமாக.

FIGURES OF OUR LADY.
மரியாயின் உவமான விளக்கம்.

(முன் தொடர்ச்சி.)

XI
வாக்குத்தத்தத்தின் பெட்டகம்.

"சேத்திம் மரங்களால் ஒரு பெட்டகத்தைப் பண்ணிக்கொள்ளுங்கள். அதை உள்ளும் புறமும் பசும்பொன்னினால் மூடிவைப்பாயாக" (யாத்தி. 25. 10. 11).

கடவுள் கற்பனைப்பிரகாரம் மோயீசன் ஓர் பெட்டகத்தைச் செய்தான். அது அழியாமரத்தாலமைக்கப்பட்டு உள்ளும் புறமும் பொன்னினால் மூடப்பட்டிருந்தது. அதன் மேற்புறஞ் சுற்றிலு மிலங்குஞ் சொர்ணமுடிவடிவாக வேலைசெய்யப்பட்டி

ருந்தது. அப்பெட்டகமே மூலஸ்தானம். அதன் மேல் பொன் கூடாரமொன்றிருந்தது. அதுவே கிருபாசனம். பெட்டகத்தின் இரு புறங்களிலும் பொன் தகட்டால் இழைத்த ஒவ்வோர் கெருபீம் வைக்கப்பட்டு அவைகளின் இரக்கைகள் மூலஸ்தானத்தையுங் கிருபாசனத்தையும்மூடிக் கொண்டிருந்தன. அப்பெட்டகத்தினுள்ளேயே சாட்சிப்பிரமாணத்தை அல்லது கற்பனைகளடங்கிய கற்பலகைகளை வைக்கும்வண்ணங் கடவுள் கற்பித்தார். அப்படியே அங்கு அவைகள் வைக்கப்பட்டன. ஆனதுபற்றி இஸ்ராயேலர் அப்பெட்டகத்தை வெகு பூச்சியமாய்க்கொண்டிருந்தார்கள். அதற்கே வாக்குத்தத்தத்தின் பெட்டகமெனப் பெயர் வழங்கிற்று. இது பழைய ஏற்பாட்டின் பெட்டகம்.

1. "மரியாய் புதிய ஏற்பாட்டின் பெட்டகம். வாக்குத்தத்தத்தின் பெட்டகமட்டுமன்று. சீவியகடவுளைக்கொண்டிருந்த மேலான பெட்டகமாம் மரியாய்" என அர்ச். தமசீன் அருளப்பர் சாற்றுகின்றார். பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள பெட்டகம் கடவுள் கற்பனையினால் உண்டாக்கப்பட்டது. ஆனால் இதுவோ அவரது திருக்கரங்களினாலேயே யுருவாக்கப்பட்டது. அவரது கைப்பட்டுவந்த பொருட்களில் விசேஷம்பொருந்தியதும் சிரேஷ்டமானதும் இதுவே. வாக்குத்தத்தத்தின் பெட்டகம் அழியாமரத்தால் அமைக்கப்பட்டிருந்தது. மரியாய் பாவத்தால் அழிவடையாதிருந்தவளே. தனதுற்பவத்திலேயே ஜென்ம வினையைக் கொள்ளாது அற்புதமாய்க் கடவுளால் காப்பாற்றப்பட்டவள். தனது சீவியகாலத்தில் கர்மப்பாவ நிழல்முதலாய் அவளண்டை யணுகவிடாது கடவுள் பாதுகாத்துவந்தனர். ஆதாமின் மக்கட் சகலரும் பாவத்தில் பிறந்தவர்கள். அப்பாவதோஷத்தினிமித்தம் மனிதர் சரீர அழிவுக்குட்பட்டவர்களானார்கள். ஆனால் மரியாய் அப்பாவ மாசுபடாதவள். ஆகவே சரீர அழிவும் அவளைக் கிட்டவில்லை. அவளது மரணத்திற்குப்பின் அவளது சரீரம் கல்லறையில் க்ஷேமிக்கப்பட்டபோதிலும் அழியாமுன்னரே பரலோகம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

2. "பெட்டகமானது உள்ளும் புறமும் பசும்பொன்னினால் மூடப்பட்டிருந்தது. இப்பொன்னைப்போன்ற புண்ணியங்கள் மரியாயைப் பொதிந்தன" என அர்ச். பெர்நார்து பகர்கின்றார். அவளிடமிருந்த புண்ணியங்கள் மற்ற முக்தர்களிடமுந் தோன்றியிருக்கலாம். ஆனால் ஆழ்ந்து பார்ப்பின் அப்புண்ணியங்கள் மரியாயினிடத்து விசேஷித்தவிதமாயும் ஒப்பற்றவிதமாயுமிருந்தனவென விளங்கும். அர்ச்சியசிஷ்டவர்களிடத்து யாதாமோர் புண்ணியம் மற்றவர்களிடத்து பிரகாசிப்பதைவிட அதிகமாய்ப் பிரகாசிக்கலாம். மரியாயினிடத்தோ சகல புண்ணியங்களும் ஜொலித்தவண்ணமாயிருந்தன. புண்ணிய துறையேறப் பல படிகளுள. ஒருவர் மற்றவரைவிட மேல் படி ஏறியிருக்கலாம். ஆனால் மரியாயோ சகல அர்ச்சியசிஷ்டவர்களையும்விட முதன்மையாக—ஒரு புண்ணியத்தில்மட்டுமல்ல—சகல புண்ணியங்களிலும் உயர்வுற்றிருக்கின்றனள்.

3. பெட்டகமானது உள்ளும் புறமும் பொன்னால் மூடப்பட்டிருந்தது. மரியாயும் பொன்போன்ற சிநேகத்தால் உள்ளும் புறமும் பொதியப்பெற்றிருந்தனள். அவளது அன்பானது ஆத்துமாவினுள்ளிருந்து தேவனை சதா நேசித்தவண்ணமிருந்தது. கடவுளைக் கனம் பண்ணுவதும், தியானிப்பதும், பரலோககாரியங்களைப்பற்றிப் பேசுவதுமே அவளது உள் வேலையாயிருந்தது. இதுவே கடவுள்மட்டில் அவள் செய்துவந்த பணி. வெளியே அதாவது புறத்தியார்மட்டில் அவளது அன்பு வீசி மற்றெல்லோரையும் நேசித்துவந்தது. பிறர்க்கு நன்மைசெய்வதிலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தனள். தனது போதனையாலுஞ் சாதனையாலும் அவர்களை நல்வழிப்படுத்த முயன்றனள். தனது பரிசுத்த சீவியத்தின் பரிமளத்தைப் பிறர்பால் தூவி எல்லோருள்ளத்திலும் தேவ சிநேகத்தை மூட்டிவந்தனள்.

4. பெட்டகத்தின்மேல் சொர்ண முடியொன்றிருந்தது. மரியாயின் சிரசின்மீதும் முடியொன்றுளதே. அதுவே அவள் ராஜகோத்திரத்தினளென்பதற் கறிகுறி. தாவீதுராஜாவின் வம்சத்தினளாகையால் ராஜகிரீடத்திற்கு அவள் உரியவளென்பது வெளிப்படை. தேவசுதனின் மாதாவானபடியால் அம்முடிக்கு எவ்விதத்திலுஞ் சுதந்தரமுள்ளவளாமே! தனது அதியுன்னத அந்தஸ்தாலும் தனக்குக் கிடைத்த விசேஷ வரங்களாலும் மரியாய் பரலோக பூலோக இராக்கினி. ஆகையால் பொன்னைப் பழிக்கும் பிரகாச முடிக்குரியவள் மரியாயன்றோ?

இப்புவியிலிருக்கையில் பற்பல துன்பதுயரங்களைப் பொறுமையா யநுபவித்துப் புண்ணிய கிரிகைகளை என்றும் புரிந்து தேவ நேசத்தால் மரணமாயினாள் மரியாய். அவளது சுதனும் சேசுநாதர் தம் அரிய மாதாவை சரீராத்துமத்தோடு மண்ணுலகினின்று விண்ணுலகெடுத்துக் கொண்டனர். தேவலோகம் புகுந்தவுடனே சேசுநாதர் தம் மாதாவை பரலோக பூலோக இராக்கினியாக முடி சூட்டினார்.

5. இரு கெரூபிம்கள் பெட்டகத்தைத் தமது இரக்கைகளால் மூடிக்கொண்டிருந்தன. இச்சம்பவமானது மரியாய் எவ்வாறு சம்மனசுக்களால் பாதுகாக்கப்பட்டுவந்தனளென்பதையொருவாறு நினைப்பூட்டுகின்றது. மனிதரொவ்வொருவருக்கும் ஓர் காவல் தூதர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். "உன்னுடைய வழியில் உன்னை வைத்துக் காபந்துபண்ண உனக்கு ஒரு தூதனைக் கொடுத்திருக்கின்றார்" என சங்கீதாகமாசிரியர் சொல்லுகிறார். ஒவ்வொரு மனிதனுக்கும் ஓரோர் தூதனிருப்பின் மரியாய்க்குத் துணையாக தூதர் பலர் இருந்தனரெனச் சொல்லவும்வேண்டுமோ? அக்கன்னிகையை விசேஷவிதமாய்க் கண்சாணித்துப் பாதுகாத்துவந்தார்கள் அவர்கள். எரிகிற வாள் கொண்டு 'பரதீஸ்' எனும் நந்தவனத்தைக் காவல் செய்தது போல், மானிட சத்துரு மரியாயியண்டையணுகக்கூடாதவண்ணம் சம்மனசுக்கள் காவல்புரிந்துவந்தனரென்பதில் ஐயமின்று.

6. ஆண்டவர் ஆக்ஞாபனைக் கிணங்கி மோயீசன் அப்பெட்டகத்தினுள் கற்பனைகளடங்கிய இரு கற்பனைகளையும் வைத்தனர். ஆகவே கடவுள் கற்பனைகளைக்கொண்ட பேழையாயிற்று. மரியாயினிடத்து கற்பனைகளடங்கிய கற்பலகைகளல்ல, கற்பனைகளை யீந்த கடவுள் தாமே வீற்றிருக்கச் சித்தங்கொண்டார். அம்மாதரசியின் உதரத்தில் வாசம்பண்ணினார். சேசுநாதர் கற்பனைகளை யழிக்க அல்ல—அவைகளை நிறைவேற்றவேவந்தார். அவரின் தாயே மரியாய். பெட்டகத்தினுள் கற்பனைகள் பூச்சியமாய் வைக்கப்பட்டிருந்தன. மரியாயும் கடவுள் கற்பனைகளைக் கண்முன்பாகக்கொண்டு அவற்றின்பிரகாரம் அணுப்பிசகாது ஒழுகிவந்தனள். அவளது கிரிகைகள் முற்றும் தேவ திருவுளத்துக்கொத்தே நின்றன.

7. இஸ்ராயேலர் வாக்குத்தத்தத்தின் நாட்டைக் கிட்டுகையில் ஜோர்தான் நதியைக் கடக்க நேரிட்டது. அப்போது கடவுள் அவர்கள் மத்தியிலிருந்த பெட்டகத்தை எல்லோருக்கும் முன்னதாகக் கொண்டுபோகவேண்டுமெனக் கட்டளையிட்டார். அதேப்பிரகாரம் குருக்கள் பெட்டகத்தை ஏந்தி நதியிற் பிரவேசித்தார்கள். ஆச்சரியம்! அவர்கள் கால் தண்ணீரில் பட்டமாத்திரத்திலேயே, நீரோட்டம் நின்றது, தண்ணீர் வடிந்தது, அப்பாகத்தில் நதி வற்றிப் போயிற்று. இஸ்ராயேலர் பயமில்லாமல் கால் நனையாது அக்கரை போயினர். ஜோர்தான் நதியைப்போலவே பாவ ஆறு ஓடிவருகின்றது. உலகிற் பிறக்கும் மானிட சந்ததியார் ஒவ்வொருவர்மீதும் பாய்ந்து அசுத்த நீராகிய ஜென்மப் பாவத்தின் தோஷத்தால் தீண்டிவிடுகின்றது. ஆனால் கன்னிமரியாய் உற்பவித்தகாலையில் அத்தீய நீரோட்டம் ஓடிவர, அவளைப் பார்த்த க்ஷணமே பின்வாங்கிற்று. பாவ மாசு அவளைத் தொட்டதில்லை. ஆகவே மாசில்லாது உற்பவித்தாள் கன்னிமரியாய்.

ஜோர்தான் நதியானது வாக்குத்தத்தத்தின் அருளாலேயே இரு பக்கமாகப் பிரிந்தது. ஆற்றில் வழியுண்டானது. இஸ்ராயேலருங் கரையேறினர். துன்பதுயர நதியானது இவ்வுலகின்கண் நாமுள்ளளவும், நம்மீது பாய்ந்தோடிவரும். அச்சமயங்களில் மரியாய் நமதண்டை யிருப்பின்—அத்தாயின் சலுகையை நாம் தேடின்—துயர ஆறு தூர ஓடிப்போமன்றோ? அத்தாயினுதவியால் இத்துன்பக்கடலாகிய உலகில் நமக்கு வரும் அல்லல்களில் சேதப்படாது கரை சேரலாம்.

8. தேவ பிரஜைகளுக்கு வாக்குத்தத்தத்தின் பெட்டகமானது வரப்பிரசாத ஊருணி போலிருந்தது. ஏனெனில் அதின்பால், அவர்கள் சர்வேஸ்வரனிடமிருந்து விசேஷ அருளடைந்துளர். இதற்குச் சான்று வேதாகமமே. "கர்த்தருடைய பெட்டகம் கேட்டையனான ஒபேதேதொம் வீட்டில் மூன்று மாதந் தங்கியிருக்கையிலேயே கர்த்தர் ஒபேதேதொமையும் அவன் வீட்டாரெல்லோரையும் ஆசீர்வதித்தார். பலநாள் சென்றபின் தேவ பெட்டகத்தினிமித்தம் கர்த்தர் ஒபேதேதொமையும் அவனுக்குண்டான எல்லாவற்றையும் ஆசீர்வதித்தார் என்று தாவீதரசனுக்கு அறிவிக்கப்பட்டது" (2 அரச. 6. 11, 12). பரமதேவனைக்கொண்டிருந்த ஜீவிய பேழையாகிய மரியாயின்மூலமாய் சக்கரியாவின் வீட்டிற்கு பேரருள் வந்ததென்பது வேத

வாக்கியம். தேவ சுதன் தன்னிருதயத்தில்வந் திறங்கினவுடனே, கன்னிமரியாய் "எழுந்து மலைநாட்டிலே யூதா தேசத்திலுள்ள ஓர் பட்டணத்துக்குத் தீவிரமாய்ச்சென்று, சக்கரியாஸுடைய வீட்டிற் பிரவேசித்து எலிசபெத்தம்மாளுக்கு மங்களஞ்சொன்னாள். எலிசபெத்தம்மாள் மரியம்மாளுடைய மங்கள வசனத்தைக் கேட்டவுடனே அவள் உதரத்திற் பிள்ளை துள்ளிற்று. எலிசபெத்தம்மாளும் இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டு "இதோ! உம்முடைய மங்களத்தின் சத்தம் என் செவிகளிற் பட்டமாத்திரத்தில் என் பிள்ளை களிப்பினால் துள்ளிற்று" என்றாள் (அர்ச். லூக். 1. 39, 44).

ஓ! மரியாயே! மகிமையுள்ள சிவிய பெட்டகமே! உம்மிடத்தில் கடவுள் வாசமாயிருந்தார். உமதடியார்களாகிய எங்கள்மீதிரங்கி எங்கள் இருதயவில்லத்தை யாசீர்வதித்தருளும். உமதன்பும் அடைக்கலமும் எங்களுக்கு இப்போதும் எப்போதும் இருக்கக்கடவது.

(தொடரும்.)

M. S. M.

EXPLANATION OF THE GOSPEL OF ST. LUKE.

அர்ச். லூக்காஸ் சுவிசேஷ விளக்கம்.

3-ம் அதிகாரம்; வசனம்—15-18.

(முன் தொடர்ச்சி.)

வசனம்.—15-16. ஸ்நாபக அருளப்பர் போதித்த வாக்கியங்களைக் கேட்ட ஜனங்கள் அவருடைய திவ்ய போதனையைப்பற்றியும், சுகிர்த நடத்தையைப்பற்றியும் வெகுவாய் அதிசயமுற்று கலங்கினார்கள். தாங்கள் இத்தனை காலம் எதிர்பார்த்திருந்த மெஸ்ஸியாஸ் அவர்தாமோவென்றும் சந்தேகப்பட்டு அவரைக் கிறீஸ்துவாகக் கைக்கொள்ளவும் எத்தனித்தார்கள். ஏனெனில் மெஸ்ஸியாஸ் வருகிற காலம் நிறைவேறியிருந்தது. அவர் அக்காலத்தில் வரவேண்டியதென்றும தேசமெங்கும் பிரசித்தமாயிருந்தது. அருளப்பருடைய ஆச்சரியமான தபசீவியமும், உச்சித போதனையும் அவர்தாம் மெஸ்ஸியாஸ் என்று நினைக்கக் காரணமாயிருந்தது. இதுநிமித்தமாய் அவரை மெஸ்ஸியாவாகச் சனங்கள் கைக்கொள்ள ஆயத்தமான விடத்திலே அருளப்பர் அதை யறிந்து அவர்களை நோக்கிச் சொன்னதாவது :—

16-17-18-ம் வசனம்.—"நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறது மெய்யே; ஆனால் என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார்; அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்க நான் பாத்திரவானல்ல; அவரே உங்களுக்கு இஸ்பிரீத்துசாந்துவினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானங் கொடுப்பார். அவருடைய சுளகு அவர் கையிலிருக்கிறது; அவர் தமது களத்தைத் தூற்றி, கோதுமையைக் களஞ்சியத்திலே சேர்த்துக்கொள்ளுவார்; பதர்களையோ அவியாத அக்கினியிலே சுட்டெரிப்பார் என்றார். மற்றும் அநேக நல்ல புத்திமதிகளையும் சொல்லி ஜனங்களுக்குப் போதித்தார்."

அருளப்பர் இங்கே கிறீஸ்துநாதர் இஸ்பிரீத்துசாந்துவினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று கூறின வாக்கியம் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லப்பட்டது.

அருளப்பரைச் சாமான்ய யூத ஜனங்களும், வேதபாரகரும் பரிசேயரும் மெத்த சிலாக்கியமாய் மதித்து, அவரையே மெஸ்ஸியாஸ் என்று வாழ்த்தி கூறுவதற்குச் சித்தமாயிருக்கும்போது, அவர் அப்புகழ்ச்சிகளை ஏற்றுக்கொள்ளாமல் தன்னை அத்தியந்தவிதமாய்த் தாழ்த்தி மெஸ்ஸியாவின் ஊழியர்களில் தான் சின்னஞ்சிறிய அற்ப ஊழியனாயிருக்க முதலாய பாத்திரவானல்லவென்று சொல்லி மெஸ்ஸியாவின் உன்னத மகிமையை எடுத்து விளக்குகிறார். ஓர் பிரபுவின் பாதரட்சைகளின் வாரை அவிழ்ப்பது அவன் ஊழியர்களைப் பொறுத்த தாழ்ந்த வேலை. அருளப்பர் தன்னை மெஸ்ஸியாவின் அற்ப ஊழியனென்று சொல்லமுதலாய் அபாத்திரனென்று தன்னைத் தாழ்த்தும்போது, தன்பேரில் ஜனங்கள் வைத்த நல்ல அபிப்பிராயத்தை மெஸ்ஸியாவின்பேரில் ஆபி

ரம் மடங்கு அதிகமாய் வைத்து அவரைப் போற்றிக் கொண்டாடும்படியாக வற்புறுத்துகிறார். மெஸ்ஸியாவின் மகிமையும் பெருமையும் அவர் கொடுக்கும் ஞானஸ்நானத்தினுலும் அவர் செலுத்தும் நீதி தீர்வையினுலும் விளங்கும் என்று காண்பிக்கிறதற்காக அருளப்பர் இங்கு அவருடைய ஞானஸ்நானத்தைப்பற்றியும் தீர்வையைப்பற்றியும் பேசுகிறார்.

அருளப்பருடைய ஞானஸ்நானம் ஜலத்தின் ஞானஸ்நானம். இது பாவத்தைப் பொறுக்கவுமில்லை, தேவ இஷ்டப் பிரசாதத்தைக் கொடுக்கவுமில்லை. ஆனால் அவனவன் தன் பாவத்துக்கு மனஸ்தாபப்பட்டு கிறீஸ்துநாதரை விசுவசித்தவர்களுக்குக் குறிப்பாக ஜலத்தினுல் கழுவப்பட்டு கிறீஸ்துநாதருடைய ஞானஸ்நானத்துக்கு ஆயத்தமாகிறதினுல் அது பச்சாத்தாப ஞானஸ்நானமென்று செல்லப்படும்.

கிறீஸ்துநாதருடைய ஞானஸ்நானமோவெனில், சென்மப்பாவத்தையும் கர்மப்பாவத்தையும் பொறுக்கிறதுமல்லாதே, தேவ இஷ்டப்பிரசாதத்தினுல் மனுஷனை நிரப்பி சர்வேசுரனுக்குப் பிரியமாக்கிறதினுல் பிரசாத ஞானஸ்நானமென்று சொல்லப்படும்.

அருளப்பர் தன்னிடம் ஞானஸ்நானம் பெறவந்தவர்களை ஜலத்தில் முழுக்காட்டி ஸ்நானம் செய்வித்தார். கிறீஸ்துநாதரோவெனில் ஆத்துமங்களை இஸ்பிரீத்துசாந்துவினுல் நிரப்பி, தேவ வரங்களை ஏராளமாய்ப் பொழிந்தார். ஆனுல் இஸ்பிரீத்துசாந்துவை தம் சொந்த வல்லமையால் ஆத்துமங்களுக்குக் கொடையாகக் கொடுக்க வல்லவர் தேவனுயிருக்கவேண்டுமல்லவோ?

ஆதலால் இங்கு மெஸ்ஸியாஸ் இஸ்பிரீத்துசாந்துவைப் பொழிவார் என்று சொல்லியிருப்பதால் அவர் மெய்யாகவே தேவனென்று சொல்லுவதற்கு இவ்வாக்கியம் போதுமான சான்றுயிருக்கின்றது.

அவர் அக்கினியினுல் ஞானஸ்நானம் கொடுப்பார் என்றதினுல், அவருடைய ஞானஸ்நானத்தின் சக்தியும் அதினுல் ஆத்துமத்தில் உண்டாகிற மாற்றமும் எப்பேர்ப்பட்டவையென்று சொல்லப்படுகின்றன.

"கர்த்தராகிய சர்வேசுரன் எரித்துப் பட்சிக்கிற அக்கினி"யென்றும் (உபாகமம் 4-ம் அதிகாரம் 24-ம் வசனம்) "அவர் எருசலேமின் அசுத்தங்களையும் இரத்தப் பழிகளையும் நீதி உணர்வாலும், உக்கிரத்தின் ஆவியாலும் சுத்திகரிக்கிறவர்" (இசையாஸ் 4-ம் அதிகாரம் 4-ம் வசனம்) என்றும் வேதாகமம் கூறுகின்றது. மெஸ்ஸியாவைப்பற்றி மலாக்கியாஸ் தீர்க்கதரிசி வசனிப்பதாவது "அவர் வரும் நாளை சகிப்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப்போலவும், வண்ணுருடைய சவுக்காரப் புல்லைப்போலவும் இருப்பார்; அவர் உட்கார்ந்து வெள்ளியைப் புடமிட்டுச் சுத்திகரித்துக்கொண்டிருப்பார். அவர் லேவியின் புத்திரரைச் சுத்திகரித்து, அவர்கள் கர்த்தருடையவர்களாயிருக்கும்படிக்கும், நீதியாய்க் காணிக்கையைச் செலுத்தும்படிக்கும் அவர்களைப் பொன்னைப்போலவும், வெள்ளியைப் போலவும் புடமிடுவார்" என்பதே. ஆகையால் இவ்வார்த்தைகளால் தீர்க்கதரிசிகள் ஆண்டவராகிய மெஸ்ஸியாவைப் பொன்னைப்போலவும், வெள்ளியைப்போலவும் புடமிட்டு சுத்திகரிப்பவர் என்று வருணித்திருப்பதுபோல், அருளப்பரும் மெஸ்ஸியாவை அவர் தம்முடைய ஞானஸ்நானத்தினுல் இஸ்பிரீத்துசாந்துவை ஆத்துமங்களில் பொழிந்து அவைகளிலுள்ள அசுத்தங்களையும் பாவக்கறைகளையும் சுட்டெரித்து பரிசுத்தமாக்க வல்லவரென்று வாழ்த்துகிறார்.

பெந்தக்கோஸ்த் திருநாளில் இஸ்பிரீத்துசாந்து அப்போஸ்தலர்கள்மீது அக்கினி ரூபமாய் இறங்கிவந்த அற்புத தேவ செயல், அவர்கள் இஸ்பிரீத்துசாந்துவாலும் அக்கினியினுலும் ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதை மகா துலக்கமாய்க் காண்பிக்கின்றது. கிறீஸ்துநாதர் அக்கினியினுல் ஞானஸ்நானம் கொடுப்பார் என்று அருளப்பர் கூறிய வாக்கியம் பெந்தக்கோஸ்த் திருநாளில் பூரணமாய் நிறைவேறிற்றென்று அர்ச். இரோனிமுஸ் வசனிக்கிறார். இஸ்பிரீத்துசாந்து அக்கினிரூபமாய் வெளியரங்கமாய் அப்போஸ்

தலர்களின்பேரில் பொழியப்பட்டதானது திருச்சபையில் கிறீஸ்துநாதருடைய ஞானஸ்நானம் பெறுகிற ஒவ்வொரு ஆத்துமத்திலும் அந்தரங்கமாய் எப்போதுமே நடந்தேறிவருகின்றது.

தீர்க்கதரிசிகள் மெஸ்ஸியாவை நீதிபரர், நடுத்தீர்க்கிறவர் என்று வாழ்த்தியிருக்கிறார்கள். சிமையோனும் ஜெருசலேமாலயத்தில் திவ்ய பாலனைத் தன் கரத்திலேந்தி மெஸ்ஸியாவின் இம்மகிமையை விவரித்திருக்கிறார். அருளப்பரும் மெஸ்ஸியாவின் நடுத்தீர்க்கும் மகிமையை இங்கு வருணித்து விளக்குகிறார். முதன்முதல் மெஸ்ஸியாஸ் சர்வ ஜாதி ஜனங்களின் இரட்சகர் என்றும், எல்லோருக்கும் நன்மைசெய்யவந்தவர் என்றும் கூறினபின், அவருடைய நன்மைத்தனத்தைக் கண்டும் அவரை ஏற்றுக்கொள்ள பிரியப்படாதவர்களைப் பயமுறுத்த அவருடைய அகோர நீதியின் மகிமையை அருளப்பர் எடுத்துக் காண்பிக்கிறார்.

குடியானவன் கோதுமை, நெல் முதலான தானியங்களை அறுத்துக் களத்தில் மிதித்துப் வைக்கோலையெல்லாம் புறம்பேயெடுத்ததின்பின் கோதுமையைச் சுளகாற் காற்றில் தூற்றிக் களஞ்சியத்திற் சேர்த்து பறந்துபோகிறசின்ன தூசியாகிய பதரை நெருப்பிலிடுகிறபிரகாரம், தம்மிலும் வல்லவரான கிறீஸ்துநாதர் நல்லோர் தீயோரையும் பிரித்து, கோதுமையையொத்த நற்கருத்துடைத்தானவர்களைத் தமது வேத சபையிலும், விசுவாசததிலும், மோட்சராச்சியத்திலும் கூட்டி, அவிசுவாசிகள் துஷ்ட மனதுள்ளவர்களாயிருக்கிற பதருக்குச் சமானமான யூதர்களையும் அக்கியாணிகளையும் கிறீஸ்துவர்களையும் அவியாத அக்கினி காளவாயாகிய நித்திய நரகத்தில சுட்டெரிப்பாரென்று அறியச்செய்கிறார்.

நாம் அருளப்பருடைய போதனைகளை யோசிக்கையில், அவை கிறீஸ்துநாதருடைய உபதேசங்களுக்குச் சாலவும் பொருத்தமுள்ளவையென்று கண்டறிகிறோம். கிறீஸ்துநாதர் தமது போதகங்களுக்கு முடிவாக பொதுத் தீர்வையைப் பற்றிப் பேசி, நல்லோருக்குச் சம்பாவனையாக பரலோக பாக்கியமும் தீயோருக்குத் தண்டனையாக நித்தியநரகமும் கொடுக்கப்படும் என்று கூறுவதுபோல, அருளப்பரும் தமது போதனைகளுக்கு முடிவாக கிறீஸ்துநாதர் அகோரமாய் நீதி செலுத்துவார் என்று அவருடைய தீர்வை மகிமையை வருணிக்கிறார்.

(தொடரும்.)

S. M.

HISTORY OF ST. MONICA.

அர்ச். மோனிக்கம்மாள் சரித்திரம்.

(All Rights Reserved.)

6-ம் அதிகாரம்.

மனோக்கியர்களின் பதிதமதம் கிறீஸ்து வேதத்தைப் பரீட்சைசெய்து, தன்னிடம் தாழ்ச்சியும் பரிசுத்தத்தனமும் இல்லாத குறையால், அதன் போதனையைக் கண்டுபிடிக்க இயலாமல், அகுஸ்தீன் மனோக்கிய பிரிவினையில் சேருதல்—அர்ச். மோனிக்கம்மாளுடைய அதிசயத்துக்குரிய நடத்தை—கர்த்தர் அவளுக்காறுதலளிக்கிறார்—அவ்வளவு அழுகைப் பிரலாபத்துடன் அவருக்காக அவள் கர்த்தரை நோக்கி மன்றாடிவர, அவர் சேதமடைவது கூடாத காரியம்.

(கி. அ. 374—377.)

(முன் தொடர்ச்சி.)

இருவரும் ஒருவருக்கொருவர் தர்க்கம் செய்யமாட்டார்கள். தன் தாய்மட்டில் தனக்குண்டான வணக்கத்தைப்பற்றி அகுஸ்தீன் அவளோடு தர்க்கம் செய்யமாட்டார். அவளும் அவரோடு தர்க்கம் செய்தவளல்ல. ஏனென்றால் ஜெபம் ஒன்றினாலேயே அகுஸ்தீனை மனந்திருப்பலாகுமென்று அவளுக்குப் பூரண நம்பிக்கையிருந்தது. அவர் சொல்வது "கர்த்தாவே அந்தகாரமான துர்ப்போதனையில் பன்றிக்கொப்பயான் புரண்டிருக்குங்காலையில், நீர் நேசித்துவந்தவளும், பக்தியும் அடக்க வொடுக்கமுள்ளவளுமான அந்தப் பரிசுத்த விதவையானவள்,

என் இரட்சண்யத்தைப்பற்றி முன்னையவிட அதிக நம்பிக்கைகொண்டிருந்தாள். இருந்தாலும், என்மட்டில் அவளுடைய அழுகையும் பெருமூச்சும் சற்றேனும் குறையாமல், ஜெபம் செய்யும்போதெல்லாம் எனக்காக உம்மிடம் புலம்பி அழுது மன்றாடுவாள். நான் அமிழ்ந்தியிருந்த அந்தகாரத்திலிருந்து புறப்பட்டு வெளிச்சத்தை நாடிவர இன்னும் சமயம் வாய்க்காதபோதிலும், நீர் அவளுடைய மன்றாட்டைக் கேட்டீர்.”

தான் தர்க்கம் செய்து தனது குமாரனை வெல்லமுடியாதென்று மோனிக்கம்மாள் தாழ்ச்சியோடு எண்ணிவந்தபடியாலும், அநாவசியமாய் ஒரு பயனுமின்றி அவருக்கு மனவருத்தம் கொடுக்கத் தனக்குப் பிரியமில்லாதபடியாலும், அவரோடு எந்த நியாயமும் பேசமாட்டாள். ஆனால் சாமர்த்தியர்களாய் விளங்கும் குருக்கள் மேற்றிராணிமார் யாராவது அவரோடு நியாயம் பேசினால், அவர்கள் வார்த்தைக்கு இசைவாரென்று நம்பி, அப்படிப்பட்டவர்களைத் தன் மகனுடன் தர்க்கமாடும்படி மன்றாடினாள்.

பத்தியிலும் புத்தியிலும் சிறந்த ஒரு விருத்தாப்பிய மேற்றிராணியார் தகாஸ்தே நகருக்கு வந்ததாகக் கேள்விப்பட்டாள். அவர் யாரென்று நமக்குத் தெரியவில்லை. அவர் வேதாகமங்களை நன்றாய் வாசித்து, வேதசாஸ்திரியாயும் விற்பன்னராயும் விளங்கிவந்தவர். கிறீஸ்து வேதபோதனைகளையும், ஆதார நியாயங்களையும், அத்தியந்த சாமர்த்தியத்துடன் வியாக்கியானம் செய்பவர். அவர் தன் குமாரனை வழிக்குக் கொண்டுவருவாரென்று மோனிக்கம்மாள் அதிக நம்பிக்கைகொண்டது எதைப்பற்றியென்றால், அவரும் அகுஸ்தீனைப்போல வாலிபத்தில் மனேக்கியராயிருந்தவரென்பதைப்பற்றித்தான். இதை யோசித்ததும், தான் கண்ட சொப்பனம் நிறைவேறப்போகிறது என்னும் நம்பிக்கையினால், அவளுடைய இருதயம் படபடவென்று துடித்தது. தீவிரமாய் அந்த மேற்றிராணியாரை நாடிப்போய், நெறிதவறியிருக்கும் தன் குமாரனுடைய விருத்தாந்தத்தைப் பரிபூரணமாயவருக்கு வெளிப்படுத்தி, எப்படியாவது அவரை மனந்திருப்பும்படி மன்றாடினாள். ஆனால் பத்தியுள்ள அந்த மேற்றிராணியாண்டவருக்கு மனிதர்களுடைய இருதயம் எப்படிப்பட்டதென்று தெரியும். மோனிக்கம்மாள் எவ்வளவுதான் அவரைக் கெஞ்சி மன்றாடியும், அவள் சொன்னதியாவையும் தலையையசைத்துக் கேட்டுக்கொண்டிருந்து, “உன் குமாரன் புதிதாய் மனேக்கிய சபையில் சேர்ந்திருக்கிறபடியால், அதிக மூர்க்கத்தனமுள்ளவனாயிருக்கிறான். ஆதலால் நீ ஆசிக்கும் காரியம் நிறைவேற இன்னும் காலம் வரவில்லை”யென்று சொல்லிவிட்டார். “அடுத்து முயன்றாலும் ஆகுநாளன்றியெடுத்த கருமங்களாகா.”

மீளவும் “அவன் போக்குப்படி அவனை விட்டுவிட்டு, உருக்கத்துடன் அவனுக்காக ஜெபம் மாத்திரம் செய்துவருவாயாக” என்றார். இதைக்கேட்டு மோனிக்கம்மாள் திருப்தியடையாமல், இன்னும் துக்கப்படுவதைக்கண்டு அவளுக்காறுதலாய்த் தன் வரலாற்றையும் சொன்னார். தான் சிறுவயதாயிருக்கும்போது, மற்றவர்களுடைய வார்த்தையைக்கேட்டு மோசம்போய் தன்னையும் மனேக்கியர்களிடம் ஒப்புவித்ததாகவும், பெரியவனானபிறகு அவர்களுடைய பிரபந்தங்களையெல்லாம் வாசித்து அவைகளை மொழிபெயர்த்ததாகவும், கடைசியாய் யாரோடும் தர்க்கஞ்செய்து எந்த நியாயத்தையும் சொல்லாமல் தானாகவே, அச்சபையின் அவலட்சணத்தைக் கண்டுபிடித்து வெறுப்படைந்து அதை விட்டுவிட்டதாகவும் விபரமாய்ச் சொல்லி “உன் மகனுக்கும் அப்படியேயாகும். அவரும் இந்தப் பிரிவினைச் சபையின் அவலட்சணத்தைத் தானாகவே கண்டுபிடிப்பார் பயப்படாதே” என்று தேற்றினார். ஆனால் அகுஸ்தீனிடம் வாக்குவாதம் செய்யும்படி மோனிக்கம்மாள் மேலும் மேலும் அவரை மன்றாடவே, “உன் வழியைப் பார்த்துக்கொண்டு போ, உன் மகனுக்காக நீ இவ்வளவு கண்ணீர் சிந்திப் பிரலாபிக்கும்போது, அவர் நாசமடைவது கூடாத காரியம்” என்று சொல்லி ஒழித்துவிட்டார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் மோனிக்கமமாளுடைய இருதயம் சந்தோஷத்தினால் துள்ளிற்று. இவ்வார்த்தைகள் அவளுக்கு ஆறுதலுண்டாக்கமாத்திரமல்ல, ஆனால் அவளுடைய நிலைமையிலிருக்கும் எல்லா கிறீஸ்துவ தாய்மார்களுக்கும் ஆறுதல் உண்டாக்கச் சொல்லப்பட்டன. “உன் மகனுக்காக நீ இவ்வளவு கண்ணீர் சிந்திப் பிரலாபிக்கும்போது, அவர் நாசமடைவது கூடாத காரியம்” என்னும் இந்தச் சிறந்த வாக்கியத்தில், எவ்வளவு ஞான வெளிச்சமும், ஆறுதலும், ஆழ்ந்த புத்திமதியும், அடங்கியிருக்கின்றனவென்று விவரித்துக்

கர்ட்ட நமக்கெவ்வளவோ விருப்பமிருப்பினும், இப்புஸ்தகம் பெருகிப்போகுமே யென்கிற அச்சத்தினுல், அதை நிறுத்திவைக்கிறோம்.

வந்தனைக்குரிய மேற்றிராணியாருடைய வார்த்தைகளை இரண்டு விதமாய் அர்த்தம்பண்ணக்கூடுமென்று அபிப்பிராயங்கொள்கிறோம். முதலாவது, ஒருவன் விசுவாசத்தினுல் தூண்டப்பட்டு, மனிதன்மட்டில் கடவுளுக்குண்டான உருக்கத்தையும், இரக்கத்தையும், அளவற்ற நேசத்தையும்சிந்தித்து, அவரது தயவை அழுது மன்ருடிக் கேட்டால், அவர் செவிசாய்க்கத் தப்பவேமாட்டார் என்னும் சத்தியத்தை யுணர்ந்து அவ்வார்த்தைகளை யுச்சரித்தார். ஒரு மனிதன் படும் துயரத்தைக்கண்டு மற்ற மனிதர்கள் இரக்கங்கொள்வார்களேயாஞல், கடவுள் அப்படி இரக்கங்காட்டாதிருப்பது கூடாத காரியம். நெறிகெட்ட மக்கள் விசுவாசத்தை யிழந்து, சுவாமியைப் பார்த்து ஜெபமே செய்யாமல், மிருகத்தைப்போல் நிர்ப்பாக்கியமாய்த் தங்கள் நாட்களைக் கழிக்கும்படியான காலம் சம்பவித்தாலும், தாய்மார்களாவது அம்மக்களுடைய இரட்சண்யத்திற்காக உருக்கத்துடன் ஜெபித்துக்கொண்டேயிருப்பார்கள். மேலும் கடவுள் மனுமக்களுடைய துஷ்டத்தனத்தைப்பற்றி, அவர்கள்மட்டில் வெறுப்புகொண்டு, இனியவர்கள் என்னதான் ஜெபம் செய்தாலுஞ்சரி, அவர்களுடைய மன்ருட்டை ஒருபோதும் கேட்கவேமாட்டோமென்று அவர் தீர்மானித்து, இருதயக் கடினம் காட்டும்படியான அப்பேர்ப்பட்ட நிர்ப்பாக்கியமான காலம் சம்பவித்தாலும், அவருடைய இருதயத்தைக் கரைத்து, அதிலிருந்து இரக்கத்தைக் கட்டாயமாய் வருவிக்கச்செய்யும் கண்ணீர்களும் உண்டு. அக்கண்ணீர்களெவை யெனில், தன் பிள்ளையின் ஆத்துமக்கேட்டைப் பற்றி தாயார் சிந்தும் கண்ணீர்களேயாம். ஓய்வொழிவில்லாமல், தன் பிள்ளைக்காக அத்தாயார் செய்யும் ஜெபம் உச்சிதமான ஜெபம். தன் சுய நலத்தைத்தேடாமல், தன் பிள்ளையின் நலத்தைத்தேடும் ஜெபம், இன்னுஞ் சொல்லவேண்டுமாஞல், எல்லா ஜெபங்களிலும் மேன்மையான அப்படிப்பட்ட ஜெபம், காட்டு மிருகங்களையும் மனமிளகச்செய்யும். அப்படிப்பட்ட ஜெபத்தைக் கடவுள் தள்ளிப்போடுவார் என்று சொல்வது எதற்கொக்குமென்ருல், அவருக்கு இரக்கமும் தயவும் கிடையவே கிடையாதென்று சொல்வதற்கொக்கும். எல்லா ஆதரவுகளும் தப்பிப்போன பிறகு, நாம் சர்வ வல்லபமும் நன்மைத் தனமுமுள்ள கடவுளின் ஆதரவைத்தஞ்சமாய் நாடும்போது, எவ்வளவோ தயவுடன் அவர் தமது இரக்கத்தைக் காட்டுவார்.

ஆகையால் தாய்மார்களே! உங்கள் மக்கள் நெறிதவறிப்போஞல் கடவுள்பேரில் பழிபோடாதேயுங்கள். அப்பழியை உங்கள்பேரிலேயே போட்டு உங்கள் மார்புகளை அடித்துக்கொள்ளுங்கள். வேண்டியமட்டும் கண்ணீர் சிந்தி அழும்படி அவ்வளவு விசுவாசம் உங்களுக்கு இல்லாதிருப்பதைப்பற்றிப் பிரலாபியுங்கள். அவர்களுடைய இரட்சண்யத்திற்கு வேண்டிய அளவு நீங்கள் அழுது மன்ருடிஞல், அவர்கள் சன்மார்க்கத்தையடைவார்கள் என்று கண்டிப்பாய் நம்புங்கள். "உன் மகனுக்காக நீ அவ்வளவு கண்ணீர் சிந்தியழும்போது அவர் நாசமடைவது கூடாத காரியம்" என்னும் இச்சிறந்த வாக்கியங்களின் முதல் அர்த்தம் இதுவே.

நமது மனதுக்குத் தோன்றும் இந்த உச்சிதமான அர்த்தமல்லாமல், வேறு சிறந்ததும் ஆழ்ந்ததுமான அர்த்தமொன்றுண்டு. மேற்றிராணியார் சொல்லிய இவ்வார்த்தைகளை யோசித்து, வேதசாஸ்திரிகள் மாத்திரமல்ல, ஆஞல் நீதிசாஸ்திரிகளும், கடவுளை யறிந்த விசுவாசிகள்மாத்திரமல்ல, ஆஞல் உலக காரியங்களை யநுபவத்தில் அறிந்திருக்கும் லௌகிக ஞானிகளும் அதிசயிக்கிருர்கள். "உன் மகனுக்காக நீ அவ்வளவு கண்ணீர் சிந்தியழும்போது, அவர் நாசமடைவது கூடாத காரியம்" என்னும் வாக்கியத்தை "உன்னைப்போலொத்த தாயார் பெற்ற பிள்ளை நாசமடைவது கூடாத காரியம்" என்றும் அர்த்தம்பண்ணலாகும். இதை யோசித்துப் பார்த்தால், அந்த வந்தனைக்குரிய மேற்றிராணியார், தன் முன் அழுது பிரலாபிக்கும் மோனிக்கம்மாளை உற்றுப்பார்த்து, இப்படிப்பட்ட தாயார் தனது குமாரனுடைய மனச்சாட்சியைப் பரிபக்குவப்படுத்தி, தன்னிருதயத்தில் கொழுந்துவிட்டு எரியும் தேவ நேச அக்கினியில் ஒரு பொறியையாவது, அவரது இருதயத்தில் செலுத்தி, துர் ஆசாபாசத்திஞல் வெல்லப்படாத உருக்கம் நிறைந்த பரிசுத்த தேவ நேசத்தையும், பாவத்தின்மட்டில் அருவருப்பையும், அவ்விருதயத்தில் நிலைநாட்டியிருப்பாளென்று கண்டிப்பாய் தீர்மானித்து, அப்படி சொன்னுரென்றும் யூகிக்கத்தகும்.

அந்த வாலிபன் வாலப்பருவத்திற்கடுத்த சிற்றின்ப சந்தோஷங்களால் மயங்கி, அப்பருவத்திற்கடுத்த சோதனைகளுக்குட்பட்டு, கொஞ்சம் நெறிதவறிப்போனாலும், தன் குழந்தைப் பருவத்தின் விசுவாசத்தை மறந்து, தன் தாயார் வணங்கும் கடவுளை மறுதலித்து, அவரது வேதத்தைவிட்டுப் பதிதனாய்ப் போனபோதிலும், அவள் தைரியங்குன்றினதில்லை. பூத்துப் போயிருக்கும் சாம்பலின்கீழ் இன்னும் நெருப்புண்டு. காயத்தில் இன்னும் அம்புண்டு. சுகந்த பரிமளம் வைக்கப்பட்டிருந்த அழகுள்ள வெண்கலப் பாத்திரம், ஆயிரம் பொடியாய்ப்போய் குப்பைமேட்டில்தான் கிடந்தபோதிலும், முதலில் அதிலிருந்த வர்க்கத்தின் வாசனை அப்பொடிகளிலிருந்து முழுதும் போகாமல் இன்னும் வீசிக்கொண்டிருப்பதுபோல, கிறீஸ்துவ தாயினால் உருப்படுத்தப்பட்ட மனச்சாட்சியானது, ஆசாபாசப் போராட்டத்தின் அலையினால் எவ்வளவு மோதப்பட்டாலும், அது முதலிலடைந்த போதனைகளின்பயனாக, அழிக்கக்கூடாத விசுவாசத்தின் சில குறிப்புகள் அதில் இன்னும் இருந்தேயிருக்கும்.

அந்தப் பரிசுத்த வயோதிப மேற்றிராணியாருடைய வார்த்தைகளில் நாம் கண்டறியும் இரண்டாம் அர்த்தம் இதுவே. மோனிக்கம்மாள் அவ்வார்த்தைகளை உற்றுத் தியானித்துக் கொண்டே, வீட்டுக்குத் திரும்பிவந்தாள். மழை பெய்துகொண்டிருக்கும்போதே, காற்றடங்கி, மந்தாரம் நீங்கி, வானம் வெளுத்து, ஆகாயத்தில் பிரகாசம் வீசுவதுபோல், இவ்வாண்டவர் சொன்ன வார்த்தையானது, அவளது சிந்தாகுலத்தை ஆற்றி, அவளுள்ளத்தில் நம்பிக்கையைப் பிறப்பித்தது.

இதுவுமன்றி, கடவுள் வேறு அடையாளங்களையும் அவளுக்குக் காட்டினார். அவ்வடையாளங்களை நமக்கு வெளிப்படுத்துவது யுக்தமானதாக, அகுஸ்தீனுக்குத் தோன்றவில்லை. கர்த்தர் தந்த அந்தச் சிறந்த வாக்குத்தத்தங்களை, மோனிக்கம்மாள் தன் இருதயத்தில் தியானித்துக்கொண்டிருந்தாள். கர்த்தரே தமது கையெழுத்திட்டுத் தந்த சாதனம்போலிருந்த அந்த வாக்குத்தத்தத்தை, அவர் நிறைவேற்ற மறந்துபோகாதபடி, நித்தமும் ஓயாமல் ஜெபம் செய்து அவரைப் பார்த்து கெஞ்சுவாள்.

ALLELUIA BELLS.
அல்லேலூயா மணிகள்.

மகா நப்போலிய ராயன் ஐயோப்பா கண்டத்தை சுற்றித்திரிந்து தேசங்களையும் பட்டணங்களையும் பிடித்து, சென்றவிடமெல்லாஞ் ஜெயங்கூறி பிரக்கியாதியாய் விளங்குங்காலத்தில், ஆஸ்திரியா தேசத்தைச்சார்ந்த பெல்ட்கெர்க் என்னுமோர் சிற்றூரைப் பிடிக்கும்படி தன் சேனாநாயகனொருவனுக்குக் கட்டளையிட்டான்.

கட்டளையைத் தளக்கர்த்தன் தலைமேற்கொண்டு 38,000 போர்ச்சேவகருடன் கர்த்தர் உயிர்த்த திருவிழாவின் அதிகாலையில் ஷை சிற்றூருக்குச் சமீபத்திலிருந்த குன்றின்மேல் பாளையமிறங்கினான்.

பெல்ட்கெர்க் என்னுமூரின் ஜனத்தொகை 4,000க்கு அதிகமில்லாவிடினும், அவர்களனைவரும் தெய்வ பயமும் பக்தியுமுள்ள நல்ல கிறீஸ்துவர்கள். இப்பெருந் திருநாளில் தங்களுக்கு நேர்ந்திருக்கும் பெரும் ஆபத்தைப்பற்றி பயந்து கஸ்திப்பட்டு அதற்குத் தப்பித்துக்கொள்ளும்படிக்கான வழிப்பாடுகளைப்பற்றி ஆலோசிக்கும்வண்ணம் அவ்வூரிலிருந்த பெரிய மனுஷர் ஓர் சங்கமாகக்கூடினார்கள். இந்தச் சங்கத்தில் ஒவ்வொருவருந் தம்தம் ஆலோசனையைப் பகர்ந்தபின் சங்கத்தார் செய்த தீர்மானம் யாதெனில், தங்களுக்குள் சிலரைப் பிராஞ்சுக்கார சேனாநாயகன் சமுகம் அனுப்பித் தங்கள் சிற்றூரின் திறவுகோலை அவனுக்கு ஒப்புக்கொடுத்து, தங்களூராரை எவ்வித துன்பத்திலுமிருந்தும் காப்பாற்ற தயைகூறும்படி மன்றாட வேண்டுமென்பதேயாம்.

இத்தீர்மானத்தையெல்லாங் கவனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த ஒரு விருத்தாப்பிய குருவானவர் எழுந்து சங்கத்தாரை நோக்கி: "பிரியமான பிள்ளைகளே! இன்று கர்த்தர் உயிர்த்த திருவிழா. மரித்தோரினின்று உயிர்த்தெழுந்த கடவுள் இந்த ஆபத்தினின்று நம்மை இரக்ஷிக்கமாட்டாரோ? இந்த ஆபத்தில் நாமவரை யண்டிப்போய் அவர்

அடைக்கலத்தை யிரந்து கேட்போமாக! புறப்படுங்கள் வழக்கப்படி தேவாலயத்துக்குத் திருவிழாவைக் கொண்டாட, அவர் நம்மைக் காப்பாற்றுவார்" என்று நம்பிக்கையுடன் சொன்னார்.

இதைக்கேட்ட அந்தச்சபையாருக்கு சந்தோஷ உற்சாகமுண்டாக, இதே நல்ல ஆலோசனையென்று கைகொட்டி ஆர்ப்பரித்து, அவ்வூரிலுள்ள பல கோவில்களின் மணிகளையும் வழக்கப்படி அடிக்கக் கட்டளையிட்டார்கள்.

அல்லேலூயா மணிகளின் இனிய ஓசையைக்கேட்ட அவ்வூரார் அனைவரும் சந்தோஷமாய் கர்த்தர் உயிர்த்த பாடல்களைப் பாடிக்கொண்டு கூட்டங்கூட்டமாய் தேவாலயத்துக்குச் சென்றார்கள்.

மணிகள் அவ்வளவு சந்தோஷக் கோஷ்டத்துடன் முழங்குவதைக்கண்ட தளக்கர்த்தன், "அவ்வூராருக்கு உதவி செய்யும்படி ஓர் பெரிய படை வந்ததைப் பற்றி யிவ்வளவு சந்தோஷங் கொண்டாடுகிறார்கள்" என்று நினைத்து, அக்ஷணமே தனது சேனை அவ்விடத்தினின்று புறப்படும்படி கட்டளையிட்டான். அல்லேலூயா மணிகள் அடித்துக்கொண்டிருக்கும் போதே பிராஞ்சு சேனை ஓட்டம்பிடிப்பதைக்கண்ட அவ்வூரார் திரும்பவும் முழந்தாள்படியிட்டு தங்களைக் காப்பாற்றின சர்வேசுரனுக்கு நன்றியறிந்த ஸ்தோத்திரம் செலுத்தித் திருநாளை மகா பயபக்தியுடன் கொண்டாடினார்கள்.

CORRESPONDENCE.
கடிதங்கள்.

[கடிதக்காரர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர். ப—ர்.]

ஆரம்பாக்கம்
லூர்துநாயகியின் தரிசனை திருநாட் கொண்டாட்டம்.

மதராஸ் அதிமேற்றிராசனத்தைச்சேர்ந்த இந்த ஆரம்பாக்கத்து கிராமத்தில் இந்த வருஷாந்திர திருவிழா முன்னதாக அறிவித்தபடியே 1920ஞு பிப்ரவரிமீ 7உ கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 15உ முடிவாயிற்று.

200 பேருக் கதிகமாகவே திருயாத்திரைக்காரர் வந்திருந்தார்கள். இவர்களுடைய அநுகூலத்திற்காக, மதராஸ் ரெயில்வே டிராபிக் மானேஜர் (Traffic Manager of Madras Ry.) திருநாளுக்கு முந்தின மூன்று நாட்களில் ஆரம்பாக்கம் ஸ்டேஷனுக்கு வரவும் போகவும் அதிக வண்டிகளை ஜன டிரேய்ன்களுக்கு (Passengers' trains) சேர்க்க மெத்த தயையுடன் உத்தரவுபண்ணினார். 14, 15-ந் தேதிகளில் எல்லா சடங்குகளிலும் ரெயில்வே பாண்டு ஆஜராயிருந்ததால், திருநாள் எப்போதையும்விட அதிக சிறப்பாயிருந்தது. போலீஸ் சர்க்கில் இன்ஸ்பெக்டர் (Circle Inspector) 4 பேர் ஜவான்களுடன் பந்தோபஸ்து கொடுத்தார். சத்தியவேத விசாரணையின் ரோஷாககாத்து சங்கை. F. கொபர்டிராட் (Revd. Father F Koperdraad) சுவாமியார் இச்சமயத்தில் இவ் விசாரணை குருவானவராகிய சங். இன்னய்யநாத சுவாமியாருக்கு (Rev. Fr. S. M. F. Ignatius) மெத்த உதவியாயிருந்து எல்லா தெய்வ கைங்கர்யங்களையும் நிறைவேற்றினார். மகா சங்கை. L. X. பெர்நாந்தீஸ் (Very Revd. Fr. L. X. Fernandes) சுவாமியாருக்குப் பதில் சங்கை. இன்னய்யநாத சுவாமியார் வெளிமைதான பிரசங்கஞ்செய்தார். சங்கை. பெர்நாந்தீஸ் சுவாமியார் சென்னையில் தமது குருப்பட்டாபிஷேகத்து வெள்ளி ஜூபிலியைப்பற்றி இத்திருநாளுக்கு வரக்கூடாமற்போனது எல்லோருக்கும் மெத்த விதனமாயிருந்தது. மிக்க வந்திக்கத்தக்க நமது அதிமேற்றிராணியாரின் பிரசன்னம் இத்திருநாளில் இல்லாமற்போனது அவருடைய வருகைக்காக காத்திருந்த குருக்களுக்கும், திருயாத்திரைக்காரருக்கும், இந்த ஜனங்களுக்கும் மெத்த விதனமாயிருந்தது. வேறு அதிக அவசர அலுவல்களின் முகாந்திரத்தைப்பற்றி அதிமேற்றிராணியார் வரக்கூடாமற்போயிற்று.

ரெயில்வே ஜெனரல் டிராபிக் மானேஜர் துரை அவர்களும், ஜில்லா போலீஸ் சூபரின்டெண்டெண்டு துரை அவர்களும், சென்னை ரெயில்வே பாண்டு காப்டன் அட்ஜுடன்ட் துரை அவர்களும் இத்திருநாளின் சிறப்புக்காக செய்த சகாய உபகாரம் மெத்தவு மதிக்கப்பட்டு, எல்லோரும் அந்தத் துரைகளுக்கு மெத்த நன்றியறிதலுடன் ஸ்தோத்திரம் புரிகிறார்கள்.

நமது திவ்ய ஆண்டவரும், லூர்துநாயகியும் இந்த தயாள அதிகார துரைகளேயும், திருயாத்திரைக்காரரையும், இத்திருநாளைக் கொண்டாட குருவானவருக்கு பொருளுதவி புரிந்த இரக்கமுள்ள தர்மிஷ்டர்களேயும் ஆசீர்வதித்து சம்பாவனே அளிப்பார்களாக. இவர்களுடைய நன்மைக்காகவும், பாக்கியத்துக்காகவும், அனுகூலத்துக்காகவும், செல்வ செழிப்புக்காகவும், நல்ல சவுக்கியத்துக்காகவும், நீடூழிக்காகவும் பங்கு குருவானவர் கடவுள் சன்னிதானத்தில் மன்றாடி வேண்டிக்கொள்ளுவார். பரலோக பிதாவின் இராச்சியம் இந்த அஞ்ஞான இராச்சியங்களில் அதிகமதிகமாய் பரம்புவதாக.

P. O. ஆரம்பாக்கம் R. S.
(நெல்லூர் ஜில்லா)
15உ பிப்ரவரிமீ 1920ளு.

இப்படிக்கு,
நன்மையைக்
கோருவோன்.

தேஹிஓவெட்டா (சிலோன்).

சங்கைக்குரிய பத்திராதிபரவர்களுக்கு,

தாங்கள் அன்புடன் ஜனவரி மாச "ஆயனேடு" இனமாக அனுப்பிவைத்த "சுகுண போதினி" என்னும் புஸ்தகத்தை முற்றமுடிய வாசிக்க, வலங்கமத்து என் இந்திய கிறீஸ்துவ சகோதர, சகோதரிகளின் முன்னேற்றத்தை நாடி நமது நண்பர் பரோபகாரத்தமாய் எழுதிய அரிய பெரிய விஷயங்களுக்காக மெத்த வந்தனம் கூறுகிறதுடன், ஷை புஸ்தகத்தை பொது நலத்தைக் கருதி, வெளியிட்ட தங்களுக்கும் மனமுவந்து நன்றி கூறுகிறேன் :—

நமது சகோதரர் நம்மிந்திய கிறீஸ்துவர்களுக்குள்ளிருந்துவரும் ஜாதி வேற்றுமையையும், ஒவ்வொரு கிராமத்திலும், ஒவ்வொரு கிறீஸ்துவ வீட்டிலும் நடைபெற்றுவரும் ஆனுசாரங்களேயுங் கண்டித்து, அவற்றின் சீர்திருத்தத்திற்குவேண்டிய முக்கிய சாராம்சங்களே செவ்வனே விளக்கியும் காட்டியிருக்கிறார். நாகரீகம்! நாகரீகம்!! என்று ஒரே கூக்குரலாயிருக்கும் இவ்வமையம் நாமும் நமது முன்னேற்றத்திற்குண்டான வழிகளேத் தேடாமல், நமக்கு தானே வழி பிறக்கும், அரசாங்கத்தார் நமக்கு முன்வந்துதவுவார்களென்று கண்மூடித்தனமாய் இருப்பது பெரும் மடமை. நமது சிறுவர் சிறுமிகளுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் பள்ளிகூடங்கள் ஸ்தாபனம்செய்து, பிரதம கல்வியையாவது கற்றுகொடுக்கவேண்டிய ஏற்பாடுகள் செய்வது அவசியம். கல்வியை கைப்பற்றினுலொழிய நாம் சீர்திருத்தம் அடையமாட்டோம். கல்வியே பிரதானம். கல்வியே, நாம் முன்னேறுவதற்குரிய சாதனம். கல்வியே நமக்கு ஊன்றுகோலும் வழிகாட்டியுமாகையால், நம்மில் ஒவ்வொருவரும், நமது சந்ததியார்க்கு கல்வியி னருமையை விளக்கி, விர்த்தியாக்க கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். இந்தியாவின் ஜனசங்கியை ஆராயுமிடத்து, இதர மதத்தினர் ஆயிரத்தில் நாம் எட்டுப்பேர்மட்டுமே யிருக்கிறோம். இவ்வளவு குறைந்த ஜனசமூகத்தை உடைய நாம் தக்க முயற்சியுடன், முன்வந்துழைக்காமற்போனுல், அந்தோ!! நாம் கடையராவோமென்பது திண்ணம். கல்வி யறிவுபெற்ற சோதரர்களே, நேயர்களே, எழுந்திருங்கள். இது தூங்குங் காலமல்ல. இது காலம் தப்பினுல் வேறு வாய்ப்பதரிது. "தூங்கியவன் கன்று கடாக் கன்று"குமுன். "முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்துவிடும்" என்பதை நன்றாய் அறிந்து ஒற்றுழைக்க சர்வ வல்லப தயாபர எம்பெருமான் அருள்பாலிப்பாராக.

A. JOHN GREGORY.

கோலாலம்பூர்.

சங்கைக்குரிய பத்திராதிபருக்கு,

கடந்த ஜனவரி பெப்ருவரி மாத சஞ்சிகைகளில் சங்கைக்குரிய L. X. பெர்நாந்தீஸ் சுவாமிகளின் 25-வது வருட வெள்ளி ஜூபிலி மகோற்சவச் சிறப்பைப்பற்றியும், அதன் விவரங்களேப்பற்றியும் பிரசுரிக்கப்பட்டிருந்ததை வாசிக்க கோலாலம்பூர் தமிழ் கத்தோலிக்கர் மனங்கொள்ளா மகிழ்ச்சியும், அடங்கா அக்களிப்புங்கொண்டார்கள். சங்கைக்குரிய L. X. பெர்நாந்தீஸ் சுவாமிகளின் பக்தி வைராக்கியத்தையும், மாற்றானின் ஆற்றலுக்கஞ்சி பின்வாங்கா தைரியத்தையும், திருச்சபை ஊழியத்தில் எத்தனே சோதனே, சஞ்சலம், சோர்வு வந்துற்ற போதிலும் மனத்திடம்வீள்ளா வீரியத்தையும், புறத்தியார்மட்டில் காண்பிக்கும் கிறீஸ்துவ தாழ்ச்சியையும், சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு சமயோசிதமாய் நடந்துகொள்ளும் திறத்தையும் யோசிக்குங்கால், கர்த்தராகிய சேசுராயரையும் அவருடைய வீரர்களாகிய அரிய தபோதனர், வேதபாரகர், அர்ச்சியசிஷ்டவர்களேயுமே ஓர் மேல்வரிச் சட்டமாகக்கொண்டு அவர்களேப் பின்பற்றி ஒழுகி, அடைதற்கரிய ஒப்புயர்வற்ற

வரங்களைப் பெற்றுள்ளார் என்று கணிக்கவேண்டியதாயிருக்கிறது. மேலும் சங்கைக்குரிய சுவாமிகளின் பிரசங்கத் திறமையை நேரில் கண்ட இவ்வூர் வாசிகள் சஞ்சிகையில் குறிப்பிட்டிருந்தபடி அவரைப் "பிரசங்கச் சிங்கம்" என்று அழைப்பதும் மிகையாகாதென்றே மதிக்கிறார்கள்.

சுமார் எட்டு வருடங்கட்குமுன்னர் தங்களுக்கென்று பிரத்தியேகமான ஓர் பங்கு கோவிலும் குருவும் இல்லாத குறையால் கோலாலம்பூர் தமிழ் கத்தோலிக்கர் மெத்த பரிதாபமான நிலைமையில் இருந்தார்களென்றாலும், அவர்கள்மட்டில் உதித்த விசுவாச நேச வாஞ்சையாலும், தமது தளரா ஊக்கத்தாலும், பிரயாசையாலும் இராப் பகலாய் ஊண் உறக்கமின்றி அலைந்து திரிந்து வீடுவீடாய் சென்று கிறீஸ்துவர்களிடம் அவரவர் அந்தஸ்துக்குத் தக்கவாறு பணம் வசூலித்து அச்சொற்பத் தொகையைக்கொண்டே தம்முடைய சொந்த பிரயாசையாலும் கண்காணிப்பாலும் நேர்த்தியான தேவாலயமொன்று கட்டிக்கொடுத்த சங்கைக்குரிய இராஜரிஷி (F. Le Mahec) F. லெமேக் சுவாமிகளின் பேருதவி சகாயத்திற்கு பங்கு கிறீஸ்துவர்கள் மெத்தவும் நன்றியறிதலுள்ளவர்களாயும் கடமைப்பட்டவர்களாயுமிருக்கிறார்கள். இதுவுமன்றி இந்த நல்ல சுவாமிகள் தம் பங்கைச்சேர்ந்த திருவிழாக் கொண்டாட்டம், தரும கைங்கரியம், கோவில் வரவு செலவு கணக்கு முதலிய இவைகளை கவனிக்க (Church Committee) கோவில் சபையொன்றும், கிறீஸ்துவர்கள் பக்தி நெறியிலும் புண்ணிய சாங்கோபாங்கத்திலும் நிலைத்து விர்த்திக்கத்தக்கதாக (Sodality of the Blessed Virgin Mary) அர்ச். கன்னிமரியாயின் சபையொன்றும் ஆகிய இரண்டு சபைகளை யேற்படுத்தி, அவைகளின் பலனாகத் தமது பங்கு கிறீஸ்துவர்களுக்குள் மூட்டியிருக்கும் ஒற்றுமைப்பந்தனமும், பக்தி ஊக்கமும், சகோதர வாஞ்சையும் நிதானிக்கத்தக்கதாகவேயிருக்கின்றது. இத்தகைய நவிலரும் நலங்களால் இவ்வூர் பங்கு தமிழ் கிறீஸ்துவர்கள் அடைதற்கரிய அரும்பலன்களை அடைய ஏதுவிருப்பதால் முரண்படக் காரணமின்றி அம்மட்டில் திருப்தியடைவதே முறை.

கோலாலம்பூர் வந்துற்ற சங்கைக்குரிய L. X. பெர்நாந்தீஸ் சுவாமிகள் அவ்வூர் அர்ச். மரியன்னை கத்தோலிக்கு பஜனை சங்கத்துக்கு விஜயஞ்செய்தபோது; தங்களுக்கு குறைந்தது மூன்று நாளைய தியான ஒடுக்கமாவது கொடுக்க ஏற்பாடுகள் செய்ய (பங்கு கிறீஸ்துவர்களின் கோரிக்கைப்படி) சபையின் கௌரவ காரியதரிசியவர்கள் பங்கு சுவாமிகளை யணுகி கேட்டதில், சங்கைக்குரிய L. X. பெர்நாந்தீஸ் சுவாமிகள் அப்போது நெடும் பிரயாணத்தாலும் கடும் உழைப்பாலும் சுகவீனத்தாலும் மெத்த பலவீனமாய் சோர்வுற்றிருந்ததின் காரணமாய் அவர் ஒடுக்கம் கொடுக்க மேற்றிராணியார் உத்தரவு கொடுக்கமாட்டார் என்று அறிவித்ததினால் கைக்கெட்டின பொருள் வாய்க்கெட்டாது போனதால் இவ்வூர் வாசிகள் மிக்க விதனத்துக்குள்ளானார்கள். சலாங்கூர் கத்தோலிக்கு கிளப்பில் (Selangor Catholic Club) சங்கைக்குரிய L. X. பெர்னாந்தீஸ் சுவாமிகள் ஆங்கில பாஷையில் உபந்நியாசித்தபோது கூட்டத்தின் அக்கிராசனாதிபதியாயிருந்த ஆங்கிலேய கனவான் H. N. Ferrers, L. L. M., M. A., Advocate & Solicitor இது விஷயமாக எடுத்துப்பேசி, சங்கைக்குரிய சுவாமிகள் கட்டாயம் இன்னொரு முறை இவ்வூருக்கு விஜயம்செய்து தியானங் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். இவ்விடத்திய கிறீஸ்துவர்களும் அவர் திரும்ப ஓர் முறை இவ்விடம் வருவார், வந்து ஒடுக்கங் கொடுப்பாரென்றுமட்டும் வீண்மனப்பால் குடித்துக்கொண்டிராமல், அவரை இங்கு வரவழைப்பதற்கான எத்தனங்களை தக்க வழியில் பிரயோகிக்கவும், அவர் இவ்வூருக்கு வருங்கால் அவருக்கு நல்வரவு கொடுத்து, நல்ல ஞான ஒடுக்கஞ்செய்து பலனடையுமாறும் முயற்சிக்கவேண்டுமாய் கோருகின்றேன்.

ஓர் கோலாலம்பூர் கத்தோலிக்கர்.

கும்பகோணம்.

1920-ம் வருஷம் பெப்ரவரி மாதம் 29-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை கும்பகோணம், அரண்மனைத் தோட்டத்தில் எடிசன்ஸ் கிராண்டு சினிமா கம்பெனியாரால் நம்முடைய திவ்ய இரட்சகரின் ஜீவிய சரித்திரம் பையாஸ்கோப் காட்சியால் மிக்க விமரிசையாய்க் காட்டப்பட்டது.

தபசுகாலத்தில் சகல கிறீஸ்துவர்களும் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருப்பாடுகளை நினைக்கவேண்டுமென்ற அவாவை மேலாகக் கொண்டு, உள்ளூர் வெளியூர் கிறீஸ்துவர்கள்

யாவரும் மேற்படி காட்சிசாலைக்கு திரள்திரளாய் வந்திருந்து காட்சியைக்கண்டு அகமகிழ்ந்தார்கள். எங்கள் விக்கர் ஜெனரலாய் துலங்கும் வந்திக்கத்தக்க சுவக்லே சுவாமியார் அவர்களும், சங்கைக்குரிய லப்லாஸ் சுவாமிகளும் விஜயமாயிருந்தனர்.

காட்சி முடிவில் விஜயஞ்செய்திருந்த சங்கைக்குரிய சுவாமிமார்களுக்கு மேற்படி கம்பெனியாரால் பூமாலைகள் சூட்டப்பட்டபோது ஜனங்கள் சந்தோஷத்தினல் கரகோஷஞ்செய்தார்கள். முடிவில் மேற்படி கம்பெனியார் பாண்டு அரசர் வாழ்த்துப்பாடலைப் பாடினது.

கண்டுகளித்தோன்.

1920-ஆு மார்ச்சுமீ 14உ தூத்துக்குடிக் கத்தோலிக்கர் ஆதீனத்தில் நடைபெற்ற கண்டனக்கூட்டத்தின் சாராம்சம்.

"அறிவித்தல்

திரிசிரபுரம் மேற்றிராணியாராகிய மஹா வந்தனைக்குரிய அகுஸ்தீன் பசாந்தியர் ஆண்டவரவர்கள் நிகழ் வருடம் ஜனவரிமீ இவ்வூரின்கண் விஜயம் செய்தகாலை நாம் வாசித்துக் கொடுத்த வந்தனப் பத்திரத்திற்கு முரணாக இங்கு சிலரனுப்பிய மனுக்களைக் கண்டனம் பண்ணும்பொருட்டு, இன்று மாலை 5½ மணியளவில் திவ்ய சேசு மரியவின் திரு இருதயத் தேவாலயப் புறவிடத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்.

நமது முனிசிப்பல் சேர்மன் ஸ்ரீமான் குருஸ் பெருனந்திஸ் அவர்கள் சபாநாயகம் வகிப்பார்கள்.

கத்தோலிக்கர் சர்வரும் சமுகம் தந்தருளும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

அ. ச. அந்தோனி சவரிமுத்து உறுதிரீக், J. L. Missier, அ. அருளப்பக்கோனர், T. S. Jacob, க. பெ. கருத்தண்ண நாடார், A. Masillamoney Pillai, M. P. Mascarenhas" 14—3—20.

நடபடிகள்.

அறிவித்தலின்பிரகாரம் மாலை 5½ மணியளவில் பொதுக்கூட்டம் கூடிற்று. இவ்வூர்ப் பிரதம வியாபாரிகளிலொருவரும் அறிவித்தலின் முதல் ஒப்பதாரியுமாகிய ஸ்ரீமான் அ. ச. அந்தோனி சவரிமுத்து உறுதிரீக்ஸ் அவர்கள், தூத்துக்குடி முனிசிப்பல் செயர்மன் ஸ்ரீமான் குருஸ் பெருனந்திஸ் அவர்களை அக்கிராசனுதிபதியாகப் பிரேரிக்க, அது ஸ்ரீமான் A. மாசில்லாமணி பிள்ளையவர்களால் ஆமோதிக்கவும் சபையோரால் கரகோஷத்துடன் அங்கீகரிக்கவும்பெற்றது. சபாநாயகரவர்கள் தமக்களிக்கப்பெற்றுள்ள கௌரவத்திற்காக சபையோருக்கு வந்தனங்கூறிக், கூடியிருக்கும் கருத்தை வெகு விஸ்தாரமாக எடுத்தோதி, முதல் தீர்மானத்தைக் கொண்டுவர ஆக்ஞாபித்தார்கள். உடனே, மெஸெர்ஸ் J. மச்சாது கம்பெனி மானேஜராகிய ஸ்ரீமான் J. L. மிசியேர் அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரித்தார்கள். "திரிசிரபுரம் மேற்றிராணியாராகிய மகா வந்தனைக்குரிய அகுஸ்தீன் பசாந்தியர் ஆண்டவரவர்கள் நிகழ் வருடம் ஜனவரிமீ இவ்வூரின்கண் விஜயஞ்செய்தகாலை வாசித்துக்கொடுத்த வந்தனப் பத்திரத்திற்கு முரணாக இங்கு சிலர் எழுதியனுப்பிய மனுக்கள் ஆழ்ந்து ஆராயாது அனுவசியமாய்க் கொண்டுவந்த உண்மைக்கு மாறுனதும் ஒழுங்கிற்கு மறுதலையானதும், சரியாய்ச் சொல்லவேணுமானல் நமது கத்தோலிக் இலக்ஷணத்திற்கே முற்றிலும் பொருத்த மற்றதென்றும் இந்தக் கூட்டம் அழுத்தமும், திருத்தமுமாக வற்புறுத்தித் தீர்மானிக்கின்றது". இதனை மெஸெர்ஸ் காரல்மில்ஸ் கம்பெனி ஸ்டோர் கீப்பர் ஸ்ரீமத் பண்டித M. P. மஸ்கறீஞாஸ் அவர்கள் ஆமோதிக்கப்போகுந் தருணத்தில், தீர்மானத்தின்பேரில் சிலருடைய ஆட்சேபனை கிளம்பிற்று. ஆட்சேபனையை நியாயவீனமெனக்கண்ட சபாநாயகரவர்கள் அவ்வாக்ஷேபனையை நிராகரிக்கவே, மேற்படி முதல் தீர்மானம் ஷை மஸ்கறீஞாஸ் அவர்களால் ஆமோதிக்கவும், கூட்டத்தின் பெரும்பான்மையோரால் மனப்பூர்வமாக அங்கீகரிக்கவும்பெற்றது.

அப்புறம் இரண்டாவது தீர்மானத்தைக் கீழ்க்கண்டமேனரியாய்ப் பெரியதாழை ஸ்ரீமான் J. A. லேன் அவர்கள் பிரேரித்தார்கள். "திரிசிரபுரம் மஹா வந்தனைக்குரிய மேற்றிராணியாண்டவரவர்கள் இங்கு விஜயஞ்செய்தகாலை தூத்துக்குடி பரத சோஷியல் லீக் எழுதியனுப்பிய மனுவில், கரை துறைகளில் தாழையூரும் பதித மார்க்கத்தைத் தழுவுகிறதாகச் சொல்லியிருக்கிற அபாண்டத்தால், தாழையூருக்கு நேரிட்டுப்போன அவமானத்தை நிராகரிக்கும்

பொருட்டுத் தாழையூராரில் யதேஷ்டமான பேர் வழிகள் பொதுளியிருக்கும் இக்கூட்டம் ஷை மனுதாரைப் பலமாகக் கண்டிக்கின்றது.” இது பெரிய தாழை ஸ்ரீமான் செலஸ்கி நற்றூர் அவர்களால் ஆமோதிக்கவும் சபையோரால் ஆர்ப்பரிப்போடு அங்கீகரிக்கவும்பெற்றது. இனி,

மூன்றாவது தீர்மானத்தைக் கொண்டுவருவான் சபாநாயகரவர்கள் தூண்ட, ஸ்ரீமான் A. மாசில்லாமணி பிள்ளையவர்கள் தமது வாசாமகோசரமான பேச்சினால் மனுதார்களை விலவிலத்துப்போகும்படிச்செய்து, கத்தோலிக்கரின் அதி மகத்வ கடமையை ஒவ்வொருவர் மனதிலும் பசுமரத்தாணிபோல் பதியவைத்து அடியிற்கண்ட தீர்மானத்தைப் பிரேரித்தனர். “மேற்சொன்ன மூராணை மனுக்கள் சம்பந்தமாக நமது தாயாகிய சத்திய திருச்சபைக்கு ஏற்பட்டுள்ள நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரஞ்செய்ய உகையில்லாத காரணத்தால் நாம் மிகவும் வருந்தி நமது இருதயம் தத்தளிக்கின்ற நிலைமையை நமது மேற்றிராணியாண்டவரவர்களுக்கும் மற்றும் திருச்சபை யதிகாரிகளுக்கும் இப்பொதுக்கூட்டம் தெரிவித்துக்கொள்ளுகின்றது”. இத்தீர்மானம் ஸ்ரீமான் J. L. பெர்னாண்டோ அவர்களால், சத்திய ஆகமத்தின் சாங்கோபாங்கமான தாட்டாந்த திருட்டாந்தங்களோடு ஆமோதிக்கப்பெற, சபையோரெல்லோரும் கரக்கம்பம் சிரக்கம்பம் செய்து தீர்மானத்தை முழுமனதோடு ஒப்புக்கொண்டார்கள். இஃதாகவே,

சபாநாயகரவர்கள் சமயோசிதமும் வெகு ருசிகரமானதும் அதிமிகப் பிரயோஜனமுள்ளதுமான அளவிறந்த புத்திமதிகளடங்கியவிதமாய் ஓர் முடிவுரை மொழிந்துட்கார, ஸ்ரீமத் பண்டித M. P. மஸ்கரீனாஸ் அவர்கள், சபைநாயகருக்கும் நன்றிகூற வந்ததில், சபாநாயகரவர்கள் “இன்னனைய நன்னய காரியங்களில் எத்தகைய சிரமத்திற்கும் பின்வாங்காது ஓர் மூதுகெலும்புபோல நின்று ஊக்கம் சிதையாது உழைப்பதால்தான், அவர்களுக்கு வரும் நித்ய கண்டங்கள் நிர்மூலமாக்கப்பட்டு, தெய்வீக கருணையில் அவர்கள் பூரண ஆயுளுடையவராக இருக்கிறார்க”ளென ஸ்ரீமான் அ. அருளப்பக்கோனாரவர்கள் சற்றுமுன் தம்மிடத்து விதந்தோதியதை வியாக்யானித்து, சபையோரின் பெரிய மனதிற்கும் அதிசயிக்கத்தக்க பொறுமைக்கும் வந்தனம் சொல்லி நிற்க, மெஸெர்ஸ் J. மச்சாது கம்பெனி Mr. ராஜநாயகம் அவர்கள், மனுதார்களால் நடந்துபோன நிந்தை அவமானங்களுக்குப் பரிகாரமாக ஒரு பர. பிரி. திரி. வேண்டிக்கொள்ள உத்தரவளித்தருள்வதற்கு சபாநாயகரவர்களைக் கேட்டுக்கொண்டபடி, மந்திரம் ஜெபிக்கப்பெற்று விஷயாம்சங்கள் முடிவுக்கு வந்தன.

தூத்துக்குடி, 14—3—20. } CRUZ FERNANDEZ,
சபாநாயகர்.

சங். பேர்நாந்தீஸ் சுவாமிகளுக்கு ஞாபகச் சின்னம்.

சென்னை, வட ஜார்ஜ்டவுன், அர்ச். மோக்ஷ இராக்கினிமாதாவினாலயத்து பங்கு சுவாமியாராகிய சங். லா. ச. பெர்நாந்தீஸ் சுவாமிகள் குருப்பட்டம் பெற்ற 25-ம் வருஷ ஜுபிலி மகோற்சவத்தை, அவர் ஜென்மநகராமாகிய மணப்பாட்டிலும், கொழும்பிலும், வீரபாண்டியன்பட்டணத்திலும், தூத்துக்குடியிலும், கடைசியாய்ச் சென்னைமாநகரத்திலும், அந்த நல்ல குருவானவரின் பக்திக்கும், குணத்துக்கும், கல்விக்கும், திறமைக்கும், பரோபகாரச் செயல்களுக்கும் தக்கவாறு மிக்க சிறப்பு ஆரவாரத்தோடு கொண்டாடிய விவரங்களைப் பத்திரிகைகள் வாயிலாகவும், பிறவாற்றாலுங் கேள்வியுற்று மிகவும் சந்தோஷமானேன். அவர்மீது நன்மதிப்பும் நல்லெண்ணமுங்கொண்டுள்ள நண்பர்கள் ஆங்காங்கே அவரது வெள்ளி ஜுபிலியை அப்போது மாத்திரம் ஆடம்பரமாய்க் கொண்டாட நினைத்தார்களேயன்றி, அவரது அரிய பெரிய குணங்களை இனிவருஞ் சந்ததிகளுக்கு நினைவூட்டி, அவரைக் கண்டுபாவித்து நன்மையடைந் துய்யுமாறு ஒரு சாஸ்வத ஞாபகச் சின்னத்தை ஏற்படுத்தவாவது, அவருடைய ஜீவியத்தில் மலிந்து செறிந்து கிடக்கும் அரிய நுட்ப விசேஷங்களை அன்னோர் வாசித்தறிந்து பயன்பெறுமாறு அவரது ஜீவிய சரித்திரத்தை அச்சிட்டு அனைவருக்கும் வழங்கவாவது யோசித்தார்களில்லை. ஜுபிலியைக் குதூகலமாய்க் கொண்டாடவேண்டியதுதான். அதை நான் வேண்டாமென்று சொல்லவரவில்லை. இந்த நல்ல சுவாமிகளின் அரிய குணங்களை இனிவருஞ் சந்ததிகள் தெரிந்துகொள்ளக்கூடுமாறு அவரது ஜீவிய சரித்திரம் ஒன்று விபரமாய் எழுதப்பட்டு எல்லோருக்கும் வழங்கப்படவேண்டுமென்றும், அந்த சுவாமிகள் பேரால், பள்ளிமாணாக்கர்களுக்கு ஸ்காலர்ஷிப்

பென்னும் உபகாரச் சம்பளம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்றும் நானிந்தப் பத்திரிகைமூலமாய், அவரது பந்து மித்திரர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவருடைய இந்த ஜூபிலிக்காக பற்பல ஊர்களில் வசூலித்த நிதியில் செலவுபோக மீதியான பணம் அங்கங்கே நிலுவையாயிருக்கிறதென்று நான் கேள்விப்படுகிறதோடு, ஷை இரண்டு விஷயங்களுக்காகவேண்டிய முழுத் தொகையையும் வசூலிப்பது மெத்த பிரயாசையான காரியமல்லவென்றும் தெரிகிறது. எல்லோரும் ஒன்றுசேர்ந்து, அங்கங்கேயுள்ள நிலுவைத் தொகைகளை ஒன்றுய்ச்சேர்த்து, பின்னும் வேண்டிய திரவியஞ் சேகரஞ்செய்து ஷை இரு காரியங்களை முடிக்கப்பார்ப்பார்களென்று நம்புகிறேன். சுவாமிகளின் ஜூபிலி ஞாபகார்த்தமாக செய்யவேண்டுமென்று கோரப்படுகிறவைகளாவன :—

(1) இன்டர்மீடியட் பரீட்சையில் தேறுகிற கத்தோலிக்கு இந்திய மாணுக்கர்களில்முதலாய் வருகிறவன் தன் பி. ஏ. பரீட்சைக்குப் படிக்கவேண்டிய செலவுக்காக "Father Fernandes Scholarship" என்று மாதாந்திர உபகாரச்சம்பளம் ரூ 40 கொடுக்க ஏற்பாடு செய்தல்.

(2) பரதகுலச் சிறுவரில் குருப்பட்டத்துக்குப் படிக்கப் பிரியமிருந்தும் பண வசதியில்லாத ஒருவருக்கு வேண்டும் பணம் உதவி செய்து படிக்கவைத்தல்.

(3) சங். பெர்நாந்தீஸ் சுவாமிகளின் ஜீவிய சரித்திரத்தையும், அவரது ஜூபிலி பற்பல ஊர்களில் கொண்டாடப்பட்ட விவரங்களையும் விளக்கி ஒரு சிறு புத்தகம் எழுதி அச்சிட்டு வழங்குதல்.

இப்படிக்கு,
ஒரு நேசன்.

MISCELLANEOUS NEWS & NOTES.
பற்பல சமாசாரம்.

புதுச்சேரியில் சவரன் மிகுதி.—சமீபத்தில் சிங்கப்பூரிலிருந்து புதுச்சேரிக்குவந்த "தொங்ஞ" என்னும் மரக்கலம் வழியாய் சவரன்கள் அடங்கிய பெட்டிகள் 62 புதுச்சேரியில் இறக்குமதி செய்யப்பட்டனவென்று தெரிகிறது.

அந்நிய நாடுகளுக்கு மணியார்டர் கமிஷன்.—ஒரு பவுனுக்கு, அல்லது பவுனுக்குக் குறைந்த எந்தத் தொகைக்கும் ஒரு ரூ. விழுக்காடு வாங்கப்படுமென்று தபால் விளம்பரமொன்று தெரிவிக்கிறது.

பணமாற்று.—இப்போது பொன்னின் விலை குறைந்திருப்பதால், அந்நிய தேசங்களுக்குப் பணம் அனுப்புவதானால் சென்ற மார்ச்சுமீ 15-ம் தேதியிலிருந்து ஒரு ரூபாய்க்கு ஷில்லிங் 2 பென்ஸ் 8 விழுக்காடு பணமாற்று செய்யப்படுமென்று தபால் இலக்கா விளம்பரஞ் செய்திருக்கிறது.

உதகமண்டலத்துக்கு டெலபோன்.—சென்னைக்கும், உதகமண்டலத்துக்கும் டெலபோன் பேசிக்கொள்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யத் தீர்மானிக்கப் பட்டுவிட்டது. வெகு சீக்கிரத்தில் அந்த ஏற்பாடு முடிவடைந்துவிடும். அந்த டெலபோன் மூலமாய் மூன்று நிமிஷகாலம் பேசுவதற்குக் கட்டணம் ரூபாய் 3–8–0 வாங்கப்படும்.

மாஜி கேய்சர்.—மாஜி கெய்சரைப் பற்றி நேச தேசத்தினர் எழுதிய கடிதத்துக்கு ஆலந்து தேசம், அவரை ஒப்புவிக்க மாட்டோமென்று சொல்லிவிட்டதால், அவரை, அவர் இப்போது வசிக்கும் அமரென்கான் என்ற இடத்திலிருந்து விலக்கி, ஆலந்துக்குள்ளேயே வேறிடத்தில் வைக்க உத்தேசிக்கிறதாகத் தெரியவருகிறது.

இங்கிலாந்துக்கு வி. பி. தபால்.—இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐர்லாந்து ஆகிய இந்நாடுகளுக்கு இந்தியாவிலிருந்தும், அந்நாடுகளிலிருந்து இந்தியாவுக்கும், இந்த ஏப்ரல்மீ முதல் தேதியிலிருந்து வி. பி. தபால் அனுப்பலாமென்று உத்தரவாயிருக்கிறது. இந்த முறையால், பொது ஜனங்களுக்கும், சில்லறை வியாபாரிகளுக்கும் அநுகூலமாகும். பெரிய வியாபாரிகளுக்கு அவ்வளவு அனுகூலமிராது என்பதினால் அதை அவர்கள் பிரதமத்தில் ஆட்சேபித்தார்கள்.

சாயச் சரக்குகள்—சாயச் சரக்குகளை உத்தரவின்றி இறக்குமதி செய்யக்கூடாதென்று சென்ற செப்டெம்பர்மீ த்தில் பிறப்பித்த விலக்கு உத்தரவு சென்ற

மார்ச்சுமீ 13-ம் தேதியிலிருந்து ரத்து செய்யப்பட்டுவிட்டது. இதுவுமன்றி, ஜெர்மனி முதலிய எதிரி தேசங்களில் இருந்து பல சாமான் சரக்குகளை வரவழைக்கலாமென்றும் உத்தரவாகியிருக்கிறது. ஐரோப்பிய சாமான்களின் விலை இன்னும் இறங்காமலிருப்பதின் காரணம், அச்சாமான்களைத் தாராளமாய்க் கொண்டுவரப்போதுமான கப்பல் வசதியில்லாத தேயாகும்.

சமீபத்தில் அர்ச்சியசிஷ்ட பட்டங்கள்.—இம்மாதம் 18உ ஆர்மா நகரத்து அதிமேற்றிராணியாரான காலஞ்சென்ற முத்திப்பேறுபெற்ற ஆலிவர் பிளங்கெற்றுக்கும், கர்த்தர் மோட்சத்துக்கு ஆரோகணமாயின திருநாளாகிய வருகிற மேமீ 13-ம் தேதியன்று முத்திப்பேறுபெற்ற மர்கரித் அலகோக் மரியம்மாளுக்கும், இஸ்பிரீத்துசாந்துவின் திருநாளாகிய மேமீ 23-ம் தேதி பிரான்சு தேசத்து முத்திபேறுபெற்ற ழான்தார்க்கு மரியம்மாளுக்கும் அர்ச்சியசிஷ்ட பட்டம் கொடுக்கப்பட ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கிறதென்று ரோமை நிருபர் தெரிவிக்கிறார்.

வேல்ஸ் இளவரசர் விஜயம்—இவ்வருஷ இறுதியில் நம் நாட்டுக்கு வரவிருக்கும் வேல்ஸ் இளவரசருக்கு நல்வரவு கூறி உபசரிக்கும் விஷயமாய் வேண்டிய செலவுக்காக வரவு செலவு கணக்குத்திட்டத்தில் நாற்பது லட்ச ரூபாய் பிரத்தியேகப்படுத்தி வைக்கப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. இந்தத் தொகை சற்றுப் பெரிதாகக் காணப்படினும், அரசிளங்குமாரின் அந்தஸ்துக்கும், இந்தியாவின் குடிமக்களின் இராஜ விசுவாசத்துக்கும் தக்க சிறப்பான உபசாரம் செய்யவேண்டுமல்லவோ?

சென்னை, ஜெனரல் ஆஸ்பத்திரி.—இந்த ஆஸ்பத்திரியில் இதுவரையில் ஏழைகள், மகராசர்கள் முதலியோர் யாவரும் யாதோர் தாரதம்மியமின்றி இந்த ஆஸ்பத்திரியில் பற்பல வியாதிகளுக்கும் சிகிச்சை செய்யப்பட்டுவந்தார்கள். இனிமேல் அதாவது, அடுத்த 1921ஞு ஜனவரிமீ முதற்கொண்டு, வேண்டிய செலவு செய்து தாங்களே சிகிச்சை செய்து கொள்ளக்கூடிய பணக்காரர்கள் ஜெனரல் ஆஸ்பத்திரியில் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டார்கள். ஏழைகளும், கவர்ண்மெண்டு உத்தியோகஸ்தர்களுமே அதில் இடம் பெறுவார்களென்று சென்னை கவர்ண்மெண்டார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள்.

கர்தினல்மார்கள்.—இப்போது இருக்கிற கர்தினல்மார்களுக்குள் மிக வயது சென்றவர் பிரான்சிலுள்ள கர்தினல் தெ. கபிரியேரெஸ் என்பவர். இவருக்கு வயது 90 ஆகிறது. கர்தினல்மார்களுக்குள் மற்றெல்லாரையும்விட அதிக நாள் கர்தினலாயிருந்து வந்திருக்கிறவர் கர்தினல் வி. வானுடெல்லி என்பவர். இவர் முப்பது வருஷமளவாய் கர்தினலாகவே இருந்து காரியங்களைப் பார்த்துவந்திருக்கிறார். இவருக்கு இப்போது வயது 83. இவர்கள் இத்தனை வயசாகியும், சரீர சௌக்கியத்தோடிருந்து மிகபுத்தியுழைப்பும், உத்தரவாதமுமான அலுவல்களை அணுவளவும் குறைவில்லாமல் நடத்திவருகிறார்களே! இது அவர்கள் பரிசுத்த சீவியத்தையும், சுத்த கருத்தையும் குறிப்பிக்கின்றதன்றோ?

ஸ்திரீகளுக்குப் பங்கு.—"ஹிந்து லா" வென்னும் சட்டத்தின்படி ஒரு ஹிந்து குடும்பத்தில் பிறந்த ஆண்பிள்ளைகளுக்கேயன்றி பெண்பிள்ளைகளுக்கு அக்குடும்ப சொத்தில் பங்கு கிடைப்பதில்லை. எவ்வளவு பணக்காரர் வீட்டில் பிறந்த பெண்ணானாலுஞ்சரி, குடும்பச் சொத்திலிருந்து சாகிறவரைக்கும் ஜீவனம்சத்துக்கு வேண்டியவற்றைமாத்திரம் பெற்றுக்கொள்ளலாமேயன்றி, அதற்குமேல் அரைக்காசுக்கு ஆசைப்பட முடியாது. கிறீஸ்துவர்களில் ஆண்மக்களுக்குப்போலவே பெண்மக்களுக்கும் சரிபங்கு கிடைப்பதைக்கண்ட ஹிந்துக்களும், அவ்வாறே தங்களுக்கும் ஒரு சட்டம் புதிதாய் ஏற்படுத்தவேண்டுமென்று முயற்சி செய்து வருகிறார்கள். இப்படிச் செய்யக்கூடுமானால் ஹிந்துப் பெண்களுக்கு பெரியதோர் சகாயமாகும்.

சீனக்காரனும் சந்திரனும்.—ஒரு சிறு கதை. ஒரு நாள் ஒரு சீனக்காரன் பொழுதுபோன வேளையில் ஒரு கிணற்றிலிருந்து தண்ணீர் மொள்ள கிணற்றில் குனிந்து

பார்த்தபொழுது, உள்ளே ஜலத்தில் சந்திரன் தோன்றுவதைக்கண்டு பரிதபித்து, கிணற்றில் தவறி விழுந்துவிட்ட சந்திரனை வெளியே யெடுத்து அது இருக்கவேண்டிய விடத்தில் சேர்க்குமாறு, அதி ஆவலுடன் அவசரமாய் தண்ணீர்த் தொட்டியை கிணற்றில் விட்டு, அதிலுள்ள சந்திரனை பக்குவமாய் தொட்டிக்குள் எவ்வளவு ஆத்திரமாய் எடுக்க முயன்றானென்றால் அத்தொட்டியை தண்ணீருக்குள்ளிருந்து இழுக்கும்போது தவறிமல்லாந்துவிழ அப்போது வானத்தில் சந்திரனிருக்கக்கண்டு, "சரி நாம் கோரினபடி, சந்திரன் எப்படியோ தன் யதாஸ்தானம் போய்விட்டது; இனி கவலையில்லை" என்றானும். இந்தக் கதை அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தேசாதிபதியாகிய மிஸ்டர் வில்சன் என்பவரால் பிரான்சில் சமாதான உடன்படிக்கை ஷரத்துக்களைத் தீர்மானித்துக் கொண்டிருந்தபொழுது சற்று ஒழிவான நிமிஷங்களில் சொல்லப்பட்டதாம்.

பிரான்சும், அர்ச். பாப்பாணவரும்.—இராஜாங்கத்துக்கும், வேதத்துக்கும் யாதொரு தொந்தமும் இருக்கப்படாதென்று சில காலத்துக்குமுன்னே கலகஞ்செய்து—பிரிவினைசெய்து, கோவில்கள், மடங்கள் முதலியவைகளுக்குச் சொந்தமாயிருந்த பல சொத்துக்களையெல்லாம் அபகரித்துக்கொண்ட பிரான்சு தேசமானது, இப்போது அர்ச். பாப்பானவருடன் சிநேகம்பாராட்ட விரும்புகிறதாகத் தெரிகிறது. சமீபத்தில் இந்த விஷயம் பிரான்சு பார்மலிமெந்து சபையில் பிரஸ்தாபிக்கப்பட்டபோது, வேதத்தை அரசாங்கத்திலிருந்து பிரிப்பது பிரான்சு உள்நாட்டுச் சட்டத்தையும், ஆசாரத்தையும் பொருத்தது. பாப்பானவருக்கு இப்போது ஸ்தானாதிபதியை அனுப்புவோமானால், இது வெளிநாட்டு விவகாரமாகும். இதுக்கும் அதுக்கும் யாதொரு தகவலில்லையென்று சமாதானம் சொல்லப்பட்டதாம். என்னே! இவர்கள் மனம் போனபோக்கு.

ஆபரணக் கோபுரம்.—இங்கிலாந்தில் இராஜாங்கத்துக்குச் சொந்தமான ஆபரணங்கள், நகைகள், விலையுயர்ந்த மற்ற சாமான்கள் முதலியவற்றையெல்லாம், "வேக் பீல்டு டவர்" என்னும் கோபுரத்தில், திருடர்கள் முதலிய எவரும் கைக்கொள்ளமுடியாத எத்தனங்களைக் கொண்டு பந்தோபஸ்து செய்து வெகு பத்திரமாய் வைக்கப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்து அரசர்கள் யாதோர் முக்கிய காலங்களில் கொலுஅமரும்போது அணிந்துகொள்ளும் இராஜ சின்னங்கள்மாத்திரம் 60 லட்சம் பவுன் விலை பெறுமெனச் சொல்லப்படுகிறது. இந்த விலையுயர்ந்த பொருள்கள், "ஐயர்ண் சேப்" என்று சொல்லப்படும் பலத்த இருப்புப் பெட்டிகளில் வைக்கப்பட்டு, அதைச்சுற்றி இருப்புப் கிராதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கிராதியின் இருப்புக் கம்பிகளுக்கு இரவில் மின்சார சக்தி யூட்டப்பட்டிருப்பதால், அவற்றைத் தொடுபவர்கள் உடனே உயிரிழந்துவிடுவார்கள். இதுவுமன்றி, அங்கே இரவிலுள்ள பாராக்காரன் யாதோர் அபாயம் நேரின், அதைத் தெரிவிக்க மின்சாரப் பொத்தானை அழுக்கினால், அது குறிக்கப்பட்ட இடத்தில் உண்டுபண்ணும் அவலச்சத்தத்தைக் கேட்டு, அதற்கென்றிருக்கும் பிரதமக் காவலாளர் எல்லோரும் ஆயுதபாணிகளாய் ஒரு நொடிக்குள் வந்துவிடுவார்கள். இவ்வளவு ஜாக்கிரதையாய் வைக்கப்பட்டிருக்கின்றன இராஜாங்க ஆபரணங்கள்.

தாய்மார்கள்.—"என் தாய்" என்ற தலைப்பிட்ட வாசகத்தை சிறு பிள்ளையாயிருக்கையில் தங்கள் பாடமாக எல்லோரும், அல்லது அனேகர் வாசித்திருப்பார்கள். அதில் தாயின் அருமையும், பெருமையும், அன்பும், பட்சமும் மனத்தில் பசுமரத்தாணியெனப் பதியும்படியானவிதமாய் எழுதப்பட்டுள்ளது. ஒரு பிள்ளையின் குணத்தையும், சீவியப்போக்கையும், உருவாக்கிப் பண்படுத்தக்கூடிய சக்தி அதன் தாயினிடத்திலிருக்கிறதென்பதை யெவரும் மறுக்கார்கள். தாய் நல்லவளானால், பெரும்பாலும் பிள்ளைகளும் நல்லவர்களாய்த் தானிருப்பார்கள். தாய் கெட்டவளானால் பிள்ளைகளும் கெட்டவர்களாவார்கள். இந்த உண்மைக்கொப்ப, "அர்ச்சியசிஷ்டவர்களின் தாய்மார்கள்" என்ற ஒரு புத்தகம் பிரன்ச் பாஷையில் வெளிவந்துளது. அதன்படி

அர்ச்சியசிஷ்டவர்களின் தாய்மார்களெல்லோரும் நல்லவர்களாகவே யிருந்திருக்கிறார்கள். உதாரணமாக: அர்ச். ஞானப்பிரகாசியார், அர்ச். பிரான்சிஸ்கு சலேசியார், அர்ச். அகுஸ்தீன், அர்ச். கிறிசோஸ்தோம் அருளப்பர் முதலியோர்கள் தங்கள் தாய்மார்களைப்பற்றி எவ்வளவோ புகழ்ந்து பேசியிருக்கிறார்கள். காரியம் இப்படியிருக்க, நமது நாட்டில் குருக்கள் போதாமையாயிருக்கிற குறையை நிவர்த்திக்கத்தக்கவர்கள் தாய்மார்களேயாவார்கள். தாய்மார்கள்மாத்திரம் தங்கள் பிள்ளைகளுக்கு சிறுவத்தில் தெய்வபக்தியையும், சற்குணங்களையும், குருத்துவத்தின் மகிமையையும் சிறுகச்சிறுகப் போதித்து வருவார்களானால், நமக்குள் சந்தேகமின்றி அநேகர் குருக்களாய்விடுவார்கள். இவ்விஷயத்தில் தாய்மார்கள் கொஞ்சம் கவனஞ்செலுத்துவார்களெனக் கோருகிறோம்.

சட்ட நிரூபண சபை.—புது அரசியல் சீர்திருத்தத்தின்படி சென்னைச் சட்ட நிரூபணச் சபையின் அமைப்பு பின்வருமாறு:—

எக்ஸ். அபிஷியோ உத்தியோகஸ்தர்கள்.			4
அரசாங்கத்தாரால் நியமிக்கப்படுபவர்	தாழ்ந்த வகுப்பார்		5
	தனிப் பிரதேசங்கள் ...		1
	உத்தியோகஸ்தரும், உத்தியோகஸ்தரல்லாதாரும் ...		19
ஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுபவர்	வியாபாரிகள்:—		
	சென்னை வியாபாரச் சபை ...	2	5
	சென்னை வர்த்தகச் சங்கம் ...	1	
	தென்னிந்தியா வியாபாரச் சபை ...	1	
	நாட்டுக்கோட்டை நகரத்தார் சங்கம்	1	
	தோட்டக்காரர்கள்		1
	சிலச்சுவான்தார்கள்:—		
	ஜமீன்தார்கள்	5	6
	ஜென்மிகள்	1	
	ஐரோப்பியர்		1
	ஆங்கிலோ இந்தியர்கள்		1
	இந்திய கிறீஸ்துவர்கள்		5
	சர்வகலாசாலை		1
	மகம்மதியர்கள்		13
	பொது-நகரத்திற்கு		9
	ஷை வெளி ஜில்லாக்களுக்கு ...		56
			127

கடைசியில் பொதுவாகக் குறிக்கப்பட்டிருக்கிற 65 ஸ்தானங்களில், 28 பிராமணரல்லாதாருக்குப் பிரத்தியேகப்படுத்தப்பட்டிருக்கின்றன. என்றாலும், இவர்கள் மற்ற 37 ஸ்தானங்களுக்கும் தெரிந்தெடுக்கப்படலாம்.

சட்ட சபையில் இந்திய கிறீஸ்துவர்கள்.—கத்தோலிக்கு இந்திய கிறீஸ்துவர்களுக்கும், புரோடெஸ்டாண்டு இந்திய கிறீஸ்துவர்களுக்கும் பொதுவாக ஐந்து ஸ்தானங்கள்தான் கொடுக்க சென்னை கவர்ண்மெண்டார் இந்திய கவர்ண்மெண்டாருக்குச் சிபாரிசு செய்திருக்கிறார்கள். இந்த ஐந்து ஸ்தானங்களும் பின்வருமாறு ஜில்லாக்களுக்குள் பங்கிடப்பட்டிருக்கின்றன.

கஞ்சம், விசாகப்பட்டணம், கோதாவரி, கிருஷ்ணா கிழக்கு, கிருஷ்ணா மேற்கு, குண்டூர், நெல்லூர்	1
கடப்பை, கர்நூல், அநந்தப்பூர், பெல்லாரி, சித்தூர், செங்கற்பட்டு, சென்னை, வட ஆறுகாடு, தென் ஆறுகாடு ...	1
சேலம், கோயமுத்தூர், நீலகிரி, மலபார், தென் கன்னடம்	1
தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, மதுரை ...	1
இராமநாதபுரம், திருநெல்வேலி	1
	5

இந்த ஐந்து ஸ்தானங்களும் இவ்வாறு பிரிக்கப்பட்டிருந்தாலும், அந்தந்த தொகுதியில் குறிக்கப்பட்டிருக்கிற ஜில்லாக்களிலுள்ளவர்களே அந்தத் தொகுதிக்குக் குறிக்கப்பட்டிருக்கிற ஸ்தானத்தை வகிக்கவேண்டுமென்பதில்லை. ஒரு தொகுதிக்குட்பட்ட ஜில்லா வாசிகள் மற்ற தொகுதிக்குக் குறிக்கப்பட்ட ஸ்தானங்களை வகிக்கலாம். வோட்டர்ஸ் என்று சொல்லப்படுகிற தெரிந்தெடுப்பவர்களுக்குப் பிரியமானால், 5 ஸ்தானங்களுக்கும் ஒரே ஊரிலிருந்தும், அல்லது எந்தத் தொகுதிக்குட்பட்டவையானாலுஞ்சரி, பல ஊர்களிலிருந்தும் பிரதிநிதிகளைத் தெரிந்துகொள்ளலாம்.

ஓட் கொடுக்கும் உரிமையுடையவர்கள்.—சொத்துக்களின்மீது வரியேனும், கம்பனிகள்மீது வரியேனும், தொழில் வரியேனும் கொடுப்பவர்; ஒரு வருஷத்துக்கு

60 ரூ. குறையாமல் குடிக்கூலி செலுத்துபவர், வருமான வரி செலுத்துபவர்; இராணுவத்திலிருந்து பென்ஷன் அல்லது உபகாரச் சம்பளம் பெறுபவர்; ஒரு வருஷத்துக்கு 3ரூ.க்கு குறையாமல் சொத்து வரி, கம்பனி வரி, தொழில் வரிகளில் ஒன்று அல்லது அதிகமான வரி செலுத்துபவர்; ரயித்வாரிபட்டாதார் அல்லது இனும்தார்; பட்டாதார் அல்லது இனும்தாரிடம் நிலத்தைக் குத்தகைக்கு வாங்கியுள்ளவர், மலையாள நிலப்பதிவுச் சட்டப்படி கூட்டுப்பட்டாதார், நிலச்சுவான்தார்; நிலச்சுவான்தாரிடம் பயிரிடும் விவசாயி ஆகிய இவர்கள் ஓட் கொடுக்கும் உரிமையுடையவராவார்கள். அந்தந்த தொகுதியில் ஓட் கொடுக்கும் உரிமையுள்ளவர்களின் நாமதேய முதலிய விவரங்கள் அடங்கிய ஜாபிதா கவர்ன்மென்டாரால் தயாரித்து அச்சிடப்பட்டு ஜனங்களுக்குக் காட்டப்படும். அப்போது, ஓட் கொடுக்கும் உரிமையிருந்தும் தங்கள் பேரை அந்த ஜாபிதாவில் காணாத பேர்கள், அவ்விஷயத்தை அதிகாரிகளுக்குத் தெரிவித்து தங்கள் பேர் ஜாபிதாவில் தாக்கலாகும்படிப் பார்க்கவேண்டும்.

இந்திய கிறீஸ்துவர்களும் சில முக்கிய உத்தியோகங்களும்.—பின் குறிக்கப்படும் அட்டவணையிலிருந்து, இந்திய கிறீஸ்துவர்கள் கவர்ன்மென்ட் உயர்தர உத்தியோகங்களில் எத்தனை வகித்துவருகிறார்களென்பது விளங்கும். உயர்தர உத்தியோகங்களை வகிக்கும் யோக்கியதை யுடையவர்கள் இல்லாமையினாலல்ல, அவைகளை அவர்களுக்குக் கொடுப்பவரில்லாமையினால்தான் அவ்வளவு சொற்பப் பேரே காணப்படுகிறார்கள்.

உத்தியோகங்கள்	உத்தியோகஸ்தர்களின் மொத்த எண்	பிராமணர்	பிராமணரல்லாதார்	கிறீஸ்துவர்	மகம்மதியர்
ஜில்லா ஜட்ஜிகள் ...	4	4	0	0	0
சப் ஜட்ஜிகள் ...	48	31	13	3	1
ஜில்லா முனிசிப்புகள்.	165	124	34	3	4

குழாய்மூலமாய் இருப்புப்பாதை.—கல்கத்தாவுக்கும் ஹௌராவுக்கும் ஹூக்ளி நதியின் கீழ் பூமிக்குள் குழாய்கள் புதைத்து அக்குழாய்களிலுள்ளே இருப்புப்பாதை போட்டுப் புகைவண்டிப் பிரயாணஞ் செய்வதற்குத் தீர்மானமாய்விட்டது. அந்த இருப்புப்பாதை ஸ்தாபிப்பதன் செலவு ஒரு மைலுக்கு 6½ லட்சமாகிறதென்று சொல்லப்படுகிறது.

சூரியனின் தோற்றம்.—ஐரோப்பாவிலுள்ள வானசாஸ்திரிகள் சூரியனைப் பற்றி அநேக நூதனமான காரியங்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அவையாவன: சூரியனானது நீலநிறமான ஓர் நட்சத்திரமாம். அதன் மத்திய அளவு எட்டரை லட்ச மைலுக்கதிகமானது. அதிக உஷ்ணமானது. வெங்காயத்தைப்போல அநேக லட்சம் சுருள்களிருக்கின்றன. அதைச் சூழ மேகம்போன்ற ஓர்வித போர்வையுண்டு. அது இரும்பு மகினிஷா முதலியன சேர்ந்ததாம். இந்தப் போர்வைதான் நம்முடைய கண்ணுக்குக் காணப்படுகிறது. இதைச்சூழ இன்னொரு போர்வையுமுண்டு. அது கொஞ்சம் குளிர்ந்திருக்கிறது. இதிலேயிருந்து அநேக சிவந்த சுவாலைகள் லட்ச மைல் உயரத்துக்கு எழும்புகின்றனவாம். சூரியனைச் சுற்றிலும் தெரிகிற செஞ்சுடர்கள் இவைகள்தான். இதைச் சூழ இன்னுமொரு போர்வையிருக்கிறது. இது வெண்ணிறமான ஒளி பொருந்தியது.

நடைப்பந்தயம்.—பெர்லின் நகரில் 22 பேர்வழிகள் 70 மைல் தூரம் ஒரே மருட்டாய் நடக்கப் பந்தயம் கட்டிக் கொண்டார்கள். அவர்களில் 6 பேர் பந்தயத்தைக் கெலித்தவர்கள். இவர்கள் மரக்கறிப் பட்சணிகளாம். மற்றவர்கள் மாம்ச பட்சணிகள். ஒருவன்மாத்திரம் 60 மைல் கிட்டினனும், மற்றவர்கள் 20, 25, 30 மைல்களில் களைத்து விழுந்துவிட்டார்களாம்.

ST. ANN'S ORPHANAGE.

(4-அணு 1 டிக்கட்டு).

CATHOLIC MALE ORPHANAGE.

(1 டிக்கட்டு ரூ. 1).

அதிர்ஷ்ட சீட்டும் புஸ்தகங்களும் சென்ற வருஷத்தைப்போல் இவ்வருஷமும் எம்மிடம் கிடைக்கும். வேண்டியவர்கள் உடனே எழுதுங்கள். M. G. S. PILLAI, *Sattur*.

புதுக்கோட்டையில் பாஸ்குத்திருநாள் அறிவிப்பு.

அர்ச்சியசிஷ்ட வாரத்தின் பெரிய வியாழக்கிழமை 7½ மணிக்குத் திவ்யபூசையும் தேவநற்கருணை ஸ்தாபகமும் ஆராதனையும் நடக்கும். சேசுநாதசுவாமியின் திருப்பாடுகளின் சரித்திரம் பாஸ்கு வெள்ளிக்கிழமை இரவும், உயிர்த்த பாஸ்கு சனிக்கிழமை இரவும் வெகு விமரிசையுடன் நடத்தப்படும். ஞாயிற்றுக்கிழமை காலை 5 மணிக்கு பாஸ்கு கொட்டகையில் திவ்யபூசை நடக்கும். 9 மணிக்குக் கோவிலில் சிறப்போடே பாட்டுப்பூசை நடக்கும். வியாழன், வெள்ளி, சனி இந்நாட்களில் பாஸ்கு சடங்குகள் நடத்தப்படும்.

REV. JUSTIN VION, S. J.,
Parish Priest.

சங். நீதிநாதர் சுவாமி,
புதுக்கோட்டை பங்கு சுவாமியார்.

DOMESTIC OCCURRENCES.
குடும்ப சுபாசுப விளம்பரங்கள்.

நன்மரண அறிக்கை.

கோயமுத்தூர்.

எனது அருமை தமக்கையாரும், ஈரோடு காலஞ்சென்ற பெட்டிஷன் ரைட்டர் S. V. துரைசாமி பிள்ளை அவர்களின் பிரிய மனைவியுமாகிய தாயம்மாள் என்ற இரத்தின அம்மாள் சென்ற ஒரு மாதகாலமாய் காயலாவாக விழுந்து, எவ்வித மருந்துகளினாலும் குணப்படாமல் தேவத்திரவிய அனுமானங்களையெல்லாம் சரிவரப் பெற்று, தனது அருமை மக்களை இப்பூவுலகில் பரிதவிக்க விட்டுவிட்டு சென்ற ௴ 11-ந் தேதியாகிய வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு கர்த்தர் சமூகம் சேர்ந்தாள். மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9½ மணிக்கு அவர்கள் சடலம் திருச்சபை ஆசாரத்தின்படி நல்லடக்கஞ்செய்யப்பட்டது. அவர்களின் குணமோ தருமத்தின் தாரணியம், பொறுமையின் பூரணம், அன்பின் களஞ்சியம், அவர்களை நன்றாய் அறிந்த அனைவருக்கும் இவைகள் நன்கு விளங்கும். இப்பேர்ப்பட்ட தாயை இழந்த மக்கள் அனுபவிக்கும் துக்கம் மெத்த. கர்த்தரின் சித்தம் அவர்களின் பாக்கியம். இதை வாசிக்கும் பந்து மித்திரர் அனைவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளவேணுமாய் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இப்படிக்கு,
தமக்கையை இழந்த தமயன்
15—3—20. டி. எ. லூர்துசாமிப் பிள்ளை.

சூளை.

எனது இளைய சகோதரன் M. A. ஜேக்கப்பின் மூதல் பேறான அருமைக் குமாரத்தி அன்னம்மாள் தனக்குத் துடர்ந்த கொடிய என்டரிக் காய்ச்சலுக்கு எவ்வித சிகிச்சைசெய்தும் குணப்படாமல் பெங்களூர் செய்ன்ட் மார்தா ஆஸ்பத்திரியில் சென்ற 1920௵ மார்ச் ௴ 14ௗ ஞாயிற்றுக்கிழமை மாலை கடைசி தேவத்திரவிய அனுமானங்களைப் பெற்று, தமது பந்துக்கள் யாவரையும் சிந்தைகலங்கவிட்டு 7 மணிக்கு தனது ஆத்துமாவை வெகு அமரிக்கையுடன் பிதாவின் கையில் ஒப்புவித்தனள். செவ்வாய்க்கிழமை காலை 10½ மணிக்கு சூளை கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. வயது 9௵ 5௴. 17 நாள். இதைக் கண்ணுறும் நண்பர்கள் இவ்வாத்தும நித்திய இளைப்பாற்றிக்காக ஒரு பர. பிரி., திரி., வேண்டிக்கொள்ள வேண்டுகிறேன்.

இப்படிக்கு,
ஆழ்ந்த துக்கக்கடலில் மூழ்கியிருக்கும்
தந்தை,
Mr. சந்தியாவு,
கோரமாண்டல்,
K. G. F.

மைலாப்பூர்.

சென்னை ஆயிரம்தீபநகரை அடுத்த மக்கிமாநகரில் வசித்து காலம் சென்ற ஜான் அவர்கள் குமாரத்தியும் எனது கொழுந்தியாருமாகிய ஸ்ரீமதி ஆரோக்கியம்மாள் கடந்த பெப்ரவரி௴ 5-ம் தேதி எனது குடும்பத்துடன் இந்த சென்னையைவிட்டு ரங்கோன் என்னும் பதிக்கு சுபகாரியத்திற்காகப் போயிருந்து அவ்விடத்தில் நிம்மோனியாவெனும் விஷஜுரத்தால் பீடிக்கப்பட்டு எவ்வித ஔஷத பிரயோகம் செய்தும் பயன்படாமல் தமது பரலோகப் பிரயாணத்துக்குரிய ஞான ஔஷதங்களை குறையறப் பெற்றுக்கொண்டு மார்ச்சு௴ 1-ந் தேதி திங்கட்கிழமை இரவு 12 மணிக்கு தனது இனஜன பந்துக்களை கதறிப் புலம்பவிட்டு தான் ஆசித்திருந்த கர்த்தரின் திருவடி போய்ச்சேர்ந்தனள். இந்த தயாள குணமுள்ள அம்மாளின் சடலம் மறுநாள் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ரங்கோன் கிமின்டையன் செம்மட்ரி என்று அழைக்கப்படும் கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இதை வாசிக்கும் கத்தோலிக்

குக் கிறீஸ்தவர்கள் அனைவரும் மரித்துப்போன ஆரோக்கியம்மாளின் ஆத்தும இளைப்பாறுதலுக்காக தங்கள் அநுதின ஜெபத்தில் மறவாது ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ள மிக்க வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறவனாகிய

சென்னைவாசி ஜோனஸ் அந்தோனி,
சன்தோம் மைலாப்பூர்,
கச்சேரி ரோட்.

பூனா

பெல்காம்பேட்டை சேரியில் வசித்து காலஞ் சென்ற மகா-ா-ா-ஸ்ரீ கனம்பொருந்திய நாட்டாண்மை ரு. இராசப்பன் அவர்கள் தலைப் புத்திரர் தற்காலம் பூனாவில் வசிக்கும் ம-ா-ா-ஸ்ரீ கனம்பொருந்திய இ. தேசி அவர்கள் கனிஷ்ட புதல்வியும் எனது ஞானக் குமாரத்தியுமாகிய தங்கச்சி அம்மாளென்னும் சின்ன பூபதி அற்புத மரியம்மாள் ஜனவரி மாதம் 27-ந் தேதி முதற் கொண்டு Enteric Fever என்னும் கொடிய விஷஜுரத்தினால் பீடிக்கப்பட்டு எவ்வித முயற்சிகள் செய்தும் குணப்படாமல் கடைசியாக நிகழும் 1920ளு பெப்ரவரிமீ 4-ந் தேதி புதன் கிழமை பகல் 11½ மணிக்கு தன் தாய் தகப்பன் மற்ற பந்துக்கள் யாவரையும் இப்பாழுலகத்தில் கதறிப் பதறி புலம்பி அழும்படியாக விட்டு விட்டு, கடந்த 4-வருஷம் 5-மாதங்களுக்குமுன் இப்பாலகியுடைய தமக்கையாகிய பெரிய பூபதி அற்புதமரியம்மாளை வான இராச்சியத்து கன்னியாஸ்திரிமார்களின் கூட்டத்தில் சேர்த்துக் கொண்டதுபோல் இவ்வருஷம் இப்பாலகியையும் சம்மனசுகளின் கூட்டத்தில் சேர்த்துக் கொள்ள சர்வேசுரனுக்கு சித்தமாயிற்று.

மறுநாளாகிய 5-ந் தேதி வியாழக்கிழமை பகல் 11 மணிக்கு மரித்த பாலகியின் சடலம் Coffin என்னும் அலங்காரமான பேழைக்குள்வைத்து திருச்சபை ஆசாரத்தின்படி அடக்கஞ்செய்யபபட்டது. இப்பாலகியின் பிராயம் நாலு வருஷம், ஒரு மாதம், ஒன்பது நாள். "சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். தேவனுடைய இராஜ்ஜியம் அப்படிப்பட்டவர்களுடையது" (அர்ச். லூக். XVIII. 16).

இதை வாசிக்கும் என் பிரிய சகோதரர்களே! வான இராச்சியத்து சம்மனசுக்களின் கூட்டத்துக்குப் பறந்துபோய்விட்ட என் ஞான குமாரத்தியாகிய தங்கச்சி அம்மாளென்னும் சின்ன பூபதி அற்புதமரியம்மாளின் ஆத்துமம், சர்வேசுரன் இரக்கத்தினால் சமாதானத்தில் இளைப்பாறும்படியாக தங்கள் ஜெபத்தில் ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளும்படியாக மன்றாடுகிறவனாகிய

20—2—20. மி. தே. அந்து.

✠

துலுக்கன் தோட்டம்.

சென்னை குலாம் அபாஸ் அலிகான் பாதூர்பேட்டையென வழங்குந் துலுக்கன் தோட்டத்தின்கண் 1899ளு முதற்கொண்டு ஸ்தாபித்து நடத்திவரும் அர்ச். செபஸ்தியார் ஜெபத் தியான பஜனை மூப்பரும் எங்களருமந்த நேயருமாகிய C. ஜான் இம்மானுவேல் 1920ளு பெப்ரவரிமீ 2உ சோமவாரம் இரவு 9½ மணிக்கு இத்தொல்லுலக வாழ்வை நீத்து தூயபரனின் திவ்ய திருவடி சேர்ந்தனர். இவரதாத்தும இளைப்பாறுதலுக்காக இதைக் கண்ணுறும் பக்தி ஸ்திரீ பூமான்கள் ஒரு பர., பிரி., திரி. வேண்டிக்கொள்ளவேணுமாய்க் கோரி நிற்கும்

ஜெபத்தியான பஜனை
2—3—20. தொண்டர்கள்.

தேம்பாவணி = = = கீர்த்தனை

2-ம் பாகம்.

இது தஞ்சை சமஸ்தானம் மகா வித்துவானும் பரசமய குஞ்சரபஞ்சானன சோடசாவதான அருளப்ப முதலியாரவர்களால் எழுதியது. விலை தபாற் செலவோடு ரூ 1—6—0.
காவலன் விடுதூது ... ,, 0—6—0.

சைவமகத்துவ திமிரபாநு.

இந்நூல் வெகு சமத்காரமான தர்க்க ரீதியில் பெயர்பெற்றதும் விசேஷ ஞானத்தைத் தரக்கூடியதுமான ஓர் ஜீவ பொக்கிஷமேயாகும். இதுவும் மேற்படி சோடசாவதானியாரவர்களால் எழுதப்பட்டது. விலை வி. பி. தபால் செலவுடன் ரூ 2—4—0.

உரிமைச்செல்வத்தை யிழந்த ஊதாரிப்பிள்ளை டிராமா.

நாடக நவரசங்களும் பொருந்தியது. நல்ல புத்தி போதனைகளையும், நீதி கருத்துகளையும் புகட்டக்கூடியது. சுகமான இராகதாளங்களுடன் இனிமையான செந்தமிழ் பாடல்களமைத்து படங்களுடன் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை வி. பி. தபால் செலவுடன் ரூ 1.

எ. எப். சைமன்,
கமிஷன் ஏஜண்ட்,
மஹா விகடதூதன் ஆபீஸ்,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.